## அத்தியாயம் 9

# பொறுப்புள்ள அடிமைத்தனம்

விக்கிரகங்களுக்கு படைக்கப்படும் இறைச்சியை சாப்பிடும் பழக்கத்தை நியாயப்படுத்தும் கொரிந்து சபை மக்கள் இரண்டு வழிகளை கையாண்டனர். முதலாவது தங்கள் அறிவிற்கு செவி கொடுத்தனர். விக்கிரக ஆராதனையின் முக்கியமான பகுதி, நோக்கம் என்று அவர்கள் சொன்னார்கள். விக்கிரக ஆராதனையில் ஈடுபட வேண்டுமென்றால் அந்த ஆராதனைக்குரிய பொருள், இருப்பதை நம்ப வேண்டும் என அவர்கள் நினைத்தார்கள். விக்கிரக ஆராதனையானது நம் எண்ணத்தில் நடக்கும் செயல் உடம்பிலல்ல என்று வாதம் செய்தார்கள்.

இரண்டாவதாக, பவுலிடம் கேள்வி கேட்டவர்கள் விக்கிரகங்களுக்கு படைக்கப்படும் இறைச்சியை சாப்பிடாமல் இருப்பது, தங்கள் சுதந்திரத்தின் மேல் திணிக்கப்படும் தேவையற்ற நிபந்தனை என்று அவரிடம் வற்புறுத்தினார்கள். சுதந்திரமே அவர்களுடைய கிறிஸ்தவ மாண்பில் மேலோங்கி யிருந்தது. இயேசு, தாம் பாவிகளுடன் அமர்ந்து சுதந்திரமாக உணவு உண்பதில் தலையிட்ட பரிசேயர்களை எதிர்த்தார் (மத். 9:10-13). பேதுரு, தான் விருத்தசேதனம் செய்யப்படாத மனிதர்களோடு அமர்ந்து சாப்பிடுவதை எதிர்த்த இஸ்ரவேலரிடம், அதை நியாயப்படுத்தினார் (அப். 11:3). கிறிஸ்தவர்கள், நியாயப் பிரமாணத்தின் கட்டுகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டுள்ளனர், என பவுல் அறிவுறுத்தினார் (கலா. 5:1). பொய்யான கடவுள் உண்மையில் இல்லாததால், அவற்றிற்கு செய்யப்படும் சடங்காச்சாரங்களில் கலந்து கொள்வதில் எந்த வித அபாயமும் இல்லை என்று கொரிந்து சபை சகோதரர்கள் வாதிட்டார்கள். விக்கிரக ஆராதனையை வரையறுத்தவர்கள் தங்கள் சுதந்தரத்தில் தலையிட முடியாது என்றே சொல்லி வந்தார்கள்.

விக்கிரக ஆராதனை பற்றி தம்மை விமர்சிப்பவர்கள் கொண்டிருந்த கருத்தை நிராகரிப்பதின் மூலம், முதலாவது காரியத்தை பவுல் கையாண்டார். எவ்வளவு சிறந்த அறிவிருந்தாலும், கண்கூடாகத் தெரியும் உண்மையை புறந்தள்ள முடியாது என்றார். ஒரு மனிதன், விக்கிரகங்கள் இருக்கும் இடத்திற்கு சென்று, மிருகங்கள் பலியிடப்படுவதை பார்த்து அவர்களுடைய ஆராதனையில் கலந்து கொள்வானேயானால் அவன் விக்கிரக ஆராதனைக்காரனே. எப்படி அறிவுப் பூர்வமாக அதை வரையறுத்தாலும், உண்மையில் அவன்

விக்கிரக ஆராதனைக்காரனே. தன் சரீரத்தில் ஒருவன் என்ன செய்கிறானோ, அதை அவனே செய்கிறான். பவுலின் இந்தக் கூற்று உண்மையை உணர்த்துகிறது. தொடர்ச்சியாக இதைப்பற்றி அவர் பேசி வருகிறார். கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டுள்ளார்கள் என ஆரம்ப கால அப்போஸ் தலர்கள் உணர்ந்திருந்தனர். உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அங்கமாக இருக்கிறது என்று வாதிட்டனர். வேசித்தனத்திற்கும், உலக அறிவிற்கும், ஆவிக்குரிய மற்றும் மாம்சத்துக்குரிய காரியங்களின் அடுத்தடுத்த நிலைகளுக்கு சிறந்த அறிவுப்பூர்வமான பொருள் இல்லாததால், வேசிகளுடன் சேருவதை நியாயப்படுத் தினார்கள் (6:11-15). ஆகவே விக்கிரக ஆராதனையைப் பற்றிய, அவர்களுடைய எண்ணங்களையும், அறிவையும் மாறச் செய்வது கடினமாயிருந்தது. ஒரு மனிதன் விக்கிரக ஆராதனை செய்பவர்களோடு உட்கார்ந்து, அவர்கள் செய்வதைச் செய்தால் அவனும் அந்த விக்கிரகங்களுக்கு ஆராதனை செய்தவனேயாகும். உண்மையான கடவுளின் மகிமையை விக்கிரகங்களுடன் பகிர்ந்து கொள்கிறான். உங்கள் மனநிலையைப் பொறுத்து, செயல்களை கணிப்பது தெரிந்தெடுக்கப்பட்டதிற்கு எதிரானதாகும். அப்படியி ருந்தால் எதுவுமே சட்டத்திற்கு உட்பட்டதல்ல.

யாரெல்லாம் தங்கள் சமூக மற்றும் பொருளாதார அந்தஸ்தை காப்பாற்றிக் கொள்ள முயன்றார்களோ அவர்கள் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதை உண்டார்கள். அவ்வாறு செய்யக்கூடாது என்று அறிவுறுத்துவது தங்கள் சுதந்தரத்திற்கு தடை என்று நினைத்தார்கள். அதற்கு அப்போஸ்தலர்கள் பதிலாக கிறிஸ்தவ சுதந்திரம் என்பது கடவுள் எது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்லது இல்லாதது என்று வரையறுத்திருக்கிறாரோ அதைப் போன்றதே என்று கூறினார்கள். ஒருவனுடைய செயல் சபையில் அமைதிக்கும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் பாதிப்பு ஏற்படுத்துமேயானால் அது தவறு நீங்கள் ஒருவருக்கொருவர் வழக்காடுவது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தை சகித்துக் கொள்கிறதில்லை ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்கிறதில்லை என வாதிடுகிறார் (6:7). விக்கிரக ஆராதனை செய்யுமிடத்தில் உட்கார்ந்திருப்பது, பலவீனமான விசுவாசிகளுக்கு தடையாயிருக்குமாயின் அது தவறு, அதை எப்படி நியாயப்படுத்தினாலும் சரி எதிர்ப்பவர்கள் அது சரி என்று தங்கள் அறிவைக் கொண்டு நியாயப்படுத்திக் கூறினாலும் கிறிஸ்தவ சுதந்திரம், நம்முடைய சகோதர சகோதரர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியை குறைத்து மதிப்பிடுவதை ஒரு போதும் ஏற்காது.

## பவுலின் அப்போஸ்தல உரிமை (9:1, 2)

**[1]நான் அப்போஸ்தலனல்லவா? நான் சுயாதீனனல்லவா? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நான் தரிசிக்க வில்லையா? கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாயிருக்கிறீர்களல்லவா? [2]நான் மற்றவர்களுக்கு அப்போஸ்தலனாயிராவிட்டாலும், உங்களுக்கல்லவோ அப்போஸ் தலனாயிருக்கிறேன், கர்த்தருக்குள் நீங்கள் என் அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரையாயிருக்கிறீர்களே.**

**வசனங்கள் 1, 2. நான் அப்போஸ்தலனல்லவா? நான் சுயாதீனனல்லவா? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா? கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாயிருக்கிறீர்களல்லவா?** இது போன்ற கேள்விகளுக் கிடையேயான தொடர்பு வெளிப்படையாக காணப்படவில்லை. ஆனால் எதற்காக இந்த கேள்விகளை எழுப்பினார் என்பது முக்கியம். 7-ம் அதிகாரத்திலே, பவுல், கொரிந்து சபையிலிருந்து தனக்கு வந்த கடிதங்களுக்கு பதிலளிக்க ஆரம்பிக்கிறார். விக்கிரக ஆராதனையைப் பற்றி இரண்டாம் முறையாக 8-ம் அதிகாரம் 1-ம் வசனத்தில் எழுப்பப்படுகிறது. கொரிந்தியர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு, அதிகாரம் 9லிருந்து 11-வரை பதிலளிக்காதது போல் தோன்றலாம். ஆனால் இந்த அதிகாரங்களை கூர்ந்து கவனிக்கும் பொழுது, அவ்வாறு இல்லை என தெரிந்து கொள்ளலாம். *மாறாக அவர் கூறும் உதாரணங்களின் மூலம் சுதந்திரம் மற்றும் அதன் தாக்கத்தை குறித்த அவருடைய கவலையை அறிவுறுத்த முற்படுகிறார்.* அவர் அடிக்கடி செய்வது போல், பல சூழ்நிலைகளில் தன்னை உதாரணமாக காட்டுகிறார். கடவுள் மீது கொண்ட பக்தியினால், கொரிந்தியர்களுக்கு விக்கிரக ஆராதனை நடைபெறும் வழிபாட்டுத்தலங்களில் படைக்கப்படும் உணவை புசிப்பதற்கு தடை ஏற்படுமானால், பவுல் தன் மீது சுமத்திக் கொண்ட சுமைகள் அதை விட அதிகம். கிறிஸ்துவை போன்ற வாழ்க்கையை வாழ வேண்டுமென அப்போஸ்தலர்கள் போதித்தார்கள்.

அதிகாரம் 9:1ல் ஆம் என்றால் ஆம் எனக் கூறும் சில உண்மையான கேள்விகளை கேட்கிறார். ஆம் அவர் விடுதலையடைந்திருந்தார். நிஜமாகவே அவர் ஒரு அப்போஸ்தலர். அவர் உண்மையாகவே இயேசுவை தம் கண்களால் கண்டிருந்தார். ஆம் கொரிந்தியர்கள், கடவுளுக்குள் அவரின் நற்காரியங்களுக்கு சாட்சிகளாயிருக்கிறார்கள். பவுல் விடுதலையடைந்திருந்த போதிலும், அவர் கடவுளை கண்டிருந்த போதிலும் கடவுளுக்குள் அவரின் செயல்கள் நடுநிலையாக உரிமை கொண்டாடுவதற்குள் அடங்கியே இருந்தது: அவருடைய ஊழியத்தின் குறிக்கோள், உத்திரவாதம் அதிகாரம் மற்றும் அப்போஸ்தலரின் முன்னுரிமை ஆகியவற்றை

உள்ளடக்கியதாக இருந்தது. அவர் ஒரு அப்போஸ்தலனாய் இருந்தபடியால், கொரிந்து சபை மக்களுக்காகவும், இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தபடியாலும், அவருடைய உரிமைகளை சுமத்துவதற்கு பதிலாக, துன்பம் அனுபவிப்பதையே தெரிந்து கொண்டார். தாங்கள் சுதந்திரம் பெற்றிருக்கிறோம், ஆகவே விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை உண்பதற்கு தடையில்லை என்று கூறியவர்களை அப்போஸ்தலர்கள் எதிர்த்தார்கள். பவுல் தன் சுதந்திரத்தை எவ்வாறு வரையறுத்துக் கொண்டாரோ அந்த வழியைப் பின்பற்றுபவர்கள் நன்றாக இருந்திருப்பார்கள். கிறிஸ்துவின் ராஜ்ஜியத்திற்காய், சில காரியங்களை விட்டுவிட செய்வதின் மூலம், தான் எப்படி வாழ்ந்தாரோ அதையே மற்றவர்களும் பின்பற்ற அறிவுறுத்தினார்.

பவுல் கடவுளை கண்டது அவர் அப்போஸ்தலனாய் மாறுவதற்கு ஒரு காரணமாயிற்று. அவருடைய கேள்விகளின் வரிசை மூலம் கடவுளை கண்டது அப்போஸ்தலத்துவத்தின் யதேச்சையான ஒரு பகுதி என்ற அவரின் புரிந்து கொள்ளுதலை உணர்த்துகிறது. உயிர்த்தெழுந்த ஆண்டவருக்கு சாட்சியாயிருப்பதையே, அவருடைய அப்போஸ்தல ஊழியத்தின் பிரதானமான நோக்கமாயிருந்தது (அப். 1:21, 22). பவுல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் தம்மை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தினதைப் பற்றி பின்னாளில் கூறும் பொழுது, "... எல்லோருக்கும் பின்பு, அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்" (1 கொரி. 15:8). தமஸ்கு செல்லும் வழியில் பவுலுக்கு கிடைத்த கிறிஸ்துவின் காட்சி காய்பாவிற்கும் மற்றும் 500 பேருக்கும் கிடைத்த காட்சிக்கு சமமாகும். இது, பவுல் தானும் எருசலேமில் உள்ள அப்போஸ்தலர் போல் ஒருவன் என்பதை உறுதிபடுத்துகிறது (2 கொரி. 11:5; கலா. 1:15, 16).

அந்த நாட்களிலே அப்போஸ்தலருக்கு, அவர்கள் கொரிந்து சபையுடன் கொண்டிருந்த உறவினால், எந்தவித எதிர்ப்பும் எழவில்லை. சபை அவருடைய ஆலோசனையை கேட்டு எழுதிய கடிதமே (7:1) அவர்கள் பவுலின் மீது வைத்திருந்த மதிப்பை எடுத்துக் காட்டுகிறது. பவுல், அந்த நான்கு கேள்விகளுக்கும், எப்படி தனக்கு பதில் தெரிந்திருந்ததோ, அதே போல் கொரிந்தியருக்கும் தெரிந்திருக்கும் என எதிர் பார்த்தார் (9:1). அவர்களிடம் இருந்த ஒற்றுமை, தாம் ஒரு அப்போஸ்தலனென்றும், தாம் கர்த்தரை கண்டிருப்பதையும் மற்றும் கொரிந்து சபை உருவாக கர்த்தர் தம்மை உபயோகித்தார் என்பதையும் உணர்த்துவதாய் இருந்தபடியால் நிம்மதி அடைந்தார். ஆனால் அவர் கொரிந்தியருக்கு இரண்டாம் நிருபத்தை எழுதும் பொழுது, அவருடைய அப்போஸ்தலத்துவத்துக்கு மிகுந்த துன்பம் வந்தது (2 கொரி. 11:22-29). ஆனால் முதலாம் நிருபத்தை எழுதும் பொழுது, அவர்கள் அவருடைய அப்போஸ்தலத்துவத்தை

ஏற்றுக்கொண்டார்கள் என்று நம்பினார்.

சமீபத்தில் உருவான சபை சடிதியில் மாறி விட்டதை கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் நிருபம் உணர்த்துகிறது. முதலாம் நிருபத்தை எழுதி முடித்த பொழுது எருசலேமிலிருந்து புதிய போதகர்கள் வந்திருந்தனர். அவர்கள் பவுலின் ஆளுமை, எருசலேமில் உள்ள மற்ற அப்போஸ்தலர்களைப் போன்றதல்ல என்று கூறினார்கள். தவறான அப்போஸ்தலருக்குக் கிடைத்த வரவேற்பைக் கண்டு, பவுல் மிகுந்த வருத்தமடைந்தார். சபையில் கணிறுமான சிலர், பவுலின் ஆளுமையை விட்டு பொய்யாய் அப்போஸ்தலர் என்று அழைக்கப் படுபவர்களின் பின் செல்ல தயாராயிருந்தனர். ஆனால் பவுல் அதை எப்படி தடுத்தார் என்பது 1 கொரிந்தியரில் சொல்லப்பட்டது போல், 2 கொரிந்தியர் 10-13ல் சொல்லப்படவில்லை.

David E. Garland என்பவர், பவுலின் அப்போஸ்த லத்திற்கு பெரிய தடை ஏற்படவில்லை என்று கூறுகிறார்:

> … சிலர் சபையில் புகுந்து விஷத்தை விதைக்கிறார்கள் என பவுல் நினைத்திருந்தால் அதை அவர் தனது வழக்கமான τινες என்ற வார்த்தையால் (*tines*, உறுதியான ஒன்று; cf. ரோமர் 3:8; 16:17-18; 2 கொரி. 3:1; கலா. 1:7). அவர்களை மேற்கோள் காட்டியிருப்பார்.[1]

அவருடைய அப்போஸ்தலத்திற்கு எதிராக, ஒருவரும் கொரிந்து சபையில் இல்லை. **நான் மற்றவர்களுக்கு அப்போஸ்தலன்** இல்லாமல் இருக்கலாம், ஆனால் **உங்களுக்கு நான் அப்போஸ்தலன்**.

சபையின் நடத்துகிறவராக பவுலின் வெற்றியை அவர் மிகுந்த உணர்திறன் மூலம் மேம்படுத்தினார். அவருக்கு கொரிந்து சபை மக்களிடம் உண்மையான அன்பு இருந்தது, அப்படியே சபை மக்களும் அவரிடம் அன்பாய் இருந்தனர். இதைப்பற்றி 9:2ல் சொல்லப்பட்டிருக்கிறது. பவுலின் அப்போஸ்தலத்துவம், சபை மக்களுக்கும் அப்போஸ்தலருக்கும் பவுலின் அப்போஸ்தலருடைய **முத்திரை** ஒரு கனியை போல காணப்பட்டது (காண்க 2 கொரி. 3:2). பவுலின் அதிகாரத்திற்கு, அவர்கள் கிறிஸ்துவின் மேல் வைத்த விசுவாசமே சாட்சி.

## பவுலின் தனிப்பட்ட உரிமைகள் (9:3-7)

**[3]என்னை நியாயம் விசாரிக்கிறவர்களுக்கு நான் சொல்லுகிற மாறுத்தரமாவது: [4]புசிக்கவும் குடிக்கவும் எங்களுக்கு அதிகாரம் இல்லையா? [5]மற்ற அப்போஸ்தலரும், கர்த்தருடைய சகோதரரும், கேபாவும் செய்கிறது போல, மனைவியாகிய ஒரு சகோதரியை கூட்டிக்கொண்டு திரிய எங்களுக்கும் அதிகாரமில்லையா? [6]அல்லது, கைத்தொழில் செய்யாதிருக்கிறதற்கு எனக்கும் பர்னபாவுக்கும் மாத்திரந்தானா அதிகாரமில்லை? [7]எவன் தன் சொந்தப் பணத்தைச்**

**செலவழித்து, தண்டிலே சேவகம் பண்ணுவான்? எவன் திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி, அதின் கனியில் புசியாதிருப்பான்? எவன் மந்தையை மேய்த்து, அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்?**

**வசனம் 3.** விக்கிரக ஆராதனைக்கு எதிரான தம்முடைய நிலைப்பாட்டிற்கு, எதிர்ப்பு வரும், என எதிர்பார்த்தார். தன்னுடைய நிலைப்பாடு கேள்விக்குரியது என்பதை உணர்ந்திருந்தார், ஏனென்றால் அவருடைய சூழ்நிலை மற்றவர்களைப் போல் இருக்கவில்லை. விக்கிரகங்களின் வழிப்பாட்டு தலங்களில் உட்கார மறுப்பதற்கு அவர் எதையும் விலையாக செலுத்த தேவையில்லை. ஆனால் சில கொரிந்தியர்கள் அதை செய்தார்கள். தான் செலுத்தாத விலையை மற்றவர்கள் செலுத்தும்படி செய்வது, தன் உறுதியான தன்மையின் மூலம் சுலபமானதாக இருந்தது.

பவுலுடைய வாதம் இதுதான்: “விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதை உண்ணாமல் விட்டு விட்டதால் நீங்கள் அனுபவிப்பதைப் போல் நான் அனுபவிக்காமல் இருக்கலாம். ஆனால் மற்ற சமயங்களிலே, நீங்கள் செலுத்துவதைக் காட்டிலும் அதிகமாக செலுத்துகிறேன்.” பவுல் தான் ஒரு சரியான மாதிரியை காட்டியதாக சொல்கிறார். அவர் ஒரு கொள்கையுடன் வாழ்ந்தார், வசதிக்கேற்ப அதை மாற்றிக் கொள்ளவில்லை. அவர் மற்றவர்களிடம் எதிர்பார்த்ததைப் போலவே கடினமான சூழ்நிலைகளையும், மற்றவர்களின் நன்மைக்காக சகித்துக் கொண்டார். பலமில்லாத கிறிஸ்தவர்கள், பிரச்சனைகள் மூலம் விசுவாசத்திலிருந்து வழிவிலகி போகாதபடி அவர்களை தடுத்தார். பவுலின் எதிர்ப்பானது அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்த காரியத்தின் மூலம் தொடங்குகிறது.

விக்கிரக வழிப்பாட்டுத்தலங்களில் அவற்றுக்குப் படைத்த இறைச்சியை புசிப்பது விக்கிரக ஆராதனைக்கு சமம் என்பதை, அப்போஸ்தலர், கொரிந்து சபையை விட, தமக்கு அதை முதலில் எடுத்துக்கொண்டார். அவருடைய சொந்த நடவடிக்கைகள், அவருடைய நீதி மற்றும் சமயம் சார்ந்தவற்றிற்கு ஊக்கமளிப்பதாக இருந்தது. கிறிஸ்துவை பிரசங்கிப்பவர்களுக்கு அவ்வண்ணமே இருக்க வேண்டும். சொந்த வாழ்க்கையில் கைக்கொண்ட கொள்கைகளும், செயல்களும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல ஏதுவாயிருந்தது. அப்படியில்லாதிருந்தால் அவர் எடுத்துச் சென்ற சுவிசேஷம் பொய்யாயிருக்கும், ஏனென்றால் அதை தன் சொந்த வாழ்க்கையில் செயல்படுத்த முடியாததால்.

**வசனம் 4.** எதிர்த்தவர்களிடம் மிகவும் ஆழமான கேள்விகள் கேட்கப்பட்டன 9:4-7. **புசிக்கவும் குடிக்கவும் எங்களுக்கு அதிகாரம் இல்லையா?** என முதலில் பவுல் கேட்கிறார். அதற்கு பதில் “எங்களுக்கு உண்டு” என்பதே. “எங்களுக்கு” என்று சொல்வதின் மூலம் அவர் எல்லா அப்போஸ்தலர்களையும் மற்றும் சுவிசேஷத்தை பிரசங்கம்

செய்பவர்களையும் உள்ளடக்கி சொல்கிறார். எதிர்மறையானது μὴ οὐκ (*mē ouk*, "எங்களுக்கு இல்லையா") என்ற பதம் கிரேக்க, மொழியிலே அதிகப்படியாய் அதன் பொருளை வெளிப்படுத்துகிறது. கிரேக்க மொழியிலே அந்தப் பொருளை குறிக்கும் வார்த்தை ἐξουσία (*exousia*, "அதிகாரம், உரிமை"). பவுல் ஒரு "உருவகச்சொல்லை" இங்கே பயன்படுத்துகிறார். புசிப்பதும், குடிப்பதும் வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதற்கென பவுல் கூறுகிறார். அதை சபை மக்களிடமிருந்து எதிர்பார்ப்பதற்கு அப்போஸ்தலருக்கு உரிமை இருக்கிறது. எப்படி கொரிந்து சபையின் ஒரு பிரிவினர், விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவைகளை புசிப்பதற்கு தங்களுக்கு உரிமை உண்டு என்று கூறினார்களோ, அதே உரிமையை பவுல் சபை மக்களிடமிருந்து எதிர்பார்க்கிறார். அந்த இரண்டு உரிமைகளையும் பவுல் சரிசமமாக பார்க்கிறார் ஆனால் அந்த உரிமையை விட்டுக் கொடுப்பது சபை மக்களின் நன்மைக்கே.

இரண்டு காரியங்களின் அடிப்படையிலே, விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதை புசிப்பதைக் குறித்து பவுல் கூறுகிறார். முதலாவது, இயற்கையாகவே தவறு ஏனென்றால், அது விக்கிரக ஆராதனை. இரண்டாவது, ஆவியில் பலமில்லாத கிறிஸ்தவர்கள் எளிதில் வழி விலகிச் செல்ல அது வாய்ப்பாயிருக்கும். இங்கே அந்த வாய்ப்புகளைப் பற்றி குறிப்பிடுகிறார். அப்போஸ்தலர்கள் தங்கள் உரிமைகளை மற்றவர்கள் மீது திணிப்பதற்கு விரும்பவில்லை. விக்கிரகங்களுக்கு படைத்ததை புசிப்பது எவ்வளவு பெரிய தீமையானது என்பதை அடுத்த அதிகாரத்தில் விளக்குகிறார்.

**வசனம் 5.** பவுல் மற்ற உரிமைகளையும் கூட விட்டுவிட்டார். திருமணத்தைப் பற்றி, **எங்களுக்கு** உரிமை இல்லையா என்று கேட்பதின் மூலம், எதிர்பதத்தின் தன்மையை உணர்த்துகிறார். மற்ற அப்போஸ்தலர்கள், காய்பா மற்றும் கடவுளின் சகோதரர்கள் திருமணம் செய்து கொண்டதைப் போலவே, பவுலுக்கும் உரிமை இருந்தது. பவுலுடன் பிரயாணம் செய்யும் நபருக்கோ அல்லது அவருக்கு மனைவியாக வருபவருக்கோ அதிக தீவிரம் தேவைப்பட்டது, ஆனால் சபையில் இருந்த உயர் தட்டு மனிதர்களுடன் மனைவியர் பிரயாணம் செய்தனர். விசுவாசியாகிய **மனைவியரை** கூட (περιάγειν, *periagein*) **கூட்டிக்கொண்டு** செல்லலாம் என்பதை பவுல் ஒத்துக் கொண்டது, திருமணத்தை அவர்கள் எவ்வளவு அதிகமாக மதித்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. அவர், மனைவியரை கூட கூட்டிச் சென்றவரை குறை கூறவில்லை. தனியாகவோ அல்லது கூட யாருடன் இருந்தாலோ, பிரயாணம் என்பது கடினமானதே. ஆனால் ஊழியத்தின் நிமித்தம் பவுல் தான் தனிமையாயிருப்பதை சகித்துக் கொண்டார். ஆகவே கடிந்து கொள்ளாமல் மற்றவர்களுக்கு சுதந்திரம் கொடுத்தார். பவுலுடைய முன்மாதிரிகள் ஒரு வலுவான தேவாலயத்தை

கட்டியமைக்கும் பொருட்டு அவரது "உரிமைகளை" ஒதுக்கி வைக்கும்படி ஊக்குவிப்பதாக அவர் நம்பினார்.

தன்னுடைய உதாரணம் மூலமும், பிற **அப்போஸ்தலர், கடவுளுடைய சகோதரர்கள் மற்றும் கேபா** போன்றவர்களின் உதாரணம் மூலமும், ஆதி திருச்சபையின் வளர்ச்சி குறித்து தெரியப்படுத்துகிறார். "பிற அப்போஸ்தலர்" என்று குறிப்பிடுவது, யூதாஸ்காரியோத்தை தவிர்த்து மற்ற 12பேர் மற்றும் மத்தியாவை குறிப்பதாகும் (அப். 1:21-26). "அப்போஸ்தலர்" என்ற பதம் சபையால் குறிப்பிட்ட நோக்கத்திற்காக அனுப்பப்பட்டவர்களை குறிப்பதாகும் (அப். 14:14).[2] ஆனால் பவுலைப் பொறுத்த மட்டில், அது கடவுளால் தெரிந்தெடுக்கபட்ட அந்த "பன்னிரெண்டு பேராய்" இருந்தது (1 கொரி. 15:5) மத்தேயு, மாற்கு, லூக்கா போன்ற ஆகமங்களிலோ, அல்லது இந்த அதிகாரங்களை படிப்பவரிடமே அந்த பன்னிரெண்டு அப்போஸ்தலருக்கு அதிக பிரதியத்துவம் கொடுக்கப்படவில்லை (மத். 10:2; மாற்கு 3:14; லூக். 6:13). அப்போஸ்தலர் நடபடிகைகளிலும் கூட அவர்களின் ஊழியத்தைப் பற்றி குறைவாகவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பவுலுக்கும் கொரிந்து சபையினருக்கும், அப்போஸ்தலரின் பிரசங்க ஊழியத்தைப் பற்றி தெரிந்திருந்தது. பேதுரு தன் மனைவியுடன் கொரிந்து சபைக்கு வந்தாரா என்பது குறித்து தெரியாது (1 கொரி. 1:12ன் குறிப்பைப் பார்க்கவும்).

"கர்த்தரின் சகோதரர்கள்" ஆதி திருச்சபையிலே அதிகமாக ஊழியம் செய்திருக்கக் கூடும். இவர்களில் யாக்கோபு மற்றும் யூதா எழுதிய நிருபங்கள் புதிய ஏற்பாட்டிலே இடம் பெற்றிருக்கிறது (காண்க யாக். 1:1; யூதா 1). யாக்கோபு கடவுளின் சகோதரர் (கலா. 1:19). எருசலேமிலிருந்த ஆதி திருச்சபையிலே ஒரு தலைவனாய் இருந்தார் (காண்க அப். 15:13-21; 21:18). பவுலுக்கும் மற்ற கொரிந்து சபை மக்களுக்கும், அவர்களின் ஊழியப்பிரயாணம் குறித்து நன்கு தெரிந்திருந்தது, சொல்லப்போனால் அந்த நான்கு பேரின் ஊழியத்தைக் குறித்தும் (காண்க மத். 13:55). நாக்ஹமாடி Nag Hammadi என்பவர் எழுதிய சில கட்டுரைகளிலிருந்தும், கண்டெடுத்த பழங்கால புத்தக சுருளிலிருந்தும், அவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளலாம். அவை வரலாற்றிலேயே அதிக மதிப்புமிக்க பொருட்களை கொண்டவையாக இருக்கலாம்.[3] பவுல் இன்றும் அதிகமாக அவர்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கலாம், ஆனால் அதை நம்முடைய கற்பனைக்கே விட்டு விட்டார். பன்னிரெண்டு அப்போஸ்தலர் மற்றும் கிறிஸ்துவின் சகோதரர்களுடைய உழியத்தைப் பற்றி, ஒரு சில வரலாற்று செய்திகளே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கேபாவைப் பற்றிய பவுலின் குறிப்பு, அவரும் மற்றவர்களும் எப்படி மதிப்பு கொடுத்தார்கள் என்பதைக் குறிக்கிறது.

பவுலின் இரண்டு கடிதங்களில் மட்டுமே கேபா குறிப்பிடப் பட்டிருக்கிறார். அவை கலாத்தியர் மற்றும் 1 கொரிந்தியராகும். அவர், கிரேக்கர்களை விட, சீரியர்களையும், கேபாவையும் தெரிந்து கொண்டாரென்பது பேதுருவிற்கு தெரியாது. கேபா என்ற சொல், பவுலின் கடிதங்களை தவிர்த்து மற்ற இடங்களில் ஒரே ஒரு முறை தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது (யோவான் 1:42). இரண்டு பெயர்களுமே, ஆங்கிலத்தில், கல் அல்லது பாறை என மொழிபெயர்க்கப்படுகிறது. சுவிசேஷங்களில் சொல்லப் பட்டதிலிருந்து கேபா அல்லது பேதுரு திருமணம் செய்து கொண்டார் என அறியலாம் (மத். 8:14; மாற்கு 1:30; லூக். 4:38) பேதுரு தன் மனைவியுடன் கொரிந்து சபைக்கு சென்றாரா என்பது பற்றி தெளிவாக குறிப்பிடப்படவில்லை. ஆனால் அப்போஸ் தலர்கள் யூதேயாவைத் தாண்டி மற்ற தேசங்களுக்கு பிரயாணம் செய்தார்கள் என்பதை அவருடைய முதல் கடிதத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. பவுலும், பர்னபாவும் அப்போஸ்தலர் மற்றும் மூப்பர்களிடம் ஆலோசனை செய்த போது, பேதுரு எருசலேமிலேயே இருந்தார் என்று அப்போஸ்தலர் நடபடிகைகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது (அப். 15:7). யூத கிறிஸ்தவர்கள், புற ஜாதி மார்க்கத்திலிருந்து கிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் மீது அதிகாரம் செலுத்தி ஆதிக்கம் செய்ய தொடங்கிய போது, பேதுரு அந்த நகரத்திலிருந்து புறப்பட்டுச்சென்றார் என சொல்லலாம் (காண்க அப். 21:20). அவர் அங்கிருந்து ரோமிற்கு சென்றார், அங்கே அவர் இரத்த சாட்சியாக மரித்தார். அப்போஸ்தலர் 15:7-க்கு பிறகு பேதுருவை பற்றி அப்போஸ்தல நடபடிகைகளில் குறிப்பிடப்படவில்லை, ஆனால் பவுலின் கடிதங்களிலிருந்து, அவர் பெரும்பாலான இடங்களுக்கு தன் மனைவியுடன் பிரயாணம் செய்தார் என அறிந்து கொள்ளலாம்.

**வசனம் 6.** பவுலும் பர்னபாவும் பிரிந்து சென்ற பிறகு, பவுல் தன்னுடைய இரண்டாவது பயணத்தை தொடங்கிய பிறகு, பர்னபாவைப் பற்றி அப்போஸ்தல நடபடிக்கைகளில் குறிப்பிடப்படவில்லை. பவுல் கலாத்தியரில் 3 முறை அவரைப்பற்றி குறிப்பிடுகிறார் (கலா. 2:1, 9, 13). மற்றும் 1 கொரிந்தியரில் (1 கொரி. 9:6) ஒரு முறையும், கொலோசெயரில் (கொலோ. 4:10) ஒரு முறையும் குறிப்பிடுகிறார். பவுலுக்கும் பர்னபாவுக்கும் ஏற்பட்ட பிரிவினை குறித்து அப்போஸ்தலர் சொல்வதற்கு ஒன்றும் இல்லை என்பதை, பிறகு எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. மாற்கை அவர்களுடன் சேர்த்துக் கொள்வதில் அவர்களுக்கு கருத்து வேறுபாடு இருந்ததே தவிர, மற்றபடி அவர்களுக்குள் ஒரு நல்ல உறவு இருந்தது (அப். 15:36-40). பவுல் அவரைப் பற்றி எப்போதும் உயர்வாகவே குறிப்பிட்டார்.

பவுல் தன் உண்மைத்தன்மையை கொரிந்தியர்களுக்கு உணர்த்தும் பொருட்டு, பலவீனமான சகோதரர்களுக்காக எதை விட்டுவிட சொன்னாரோ, அதையே அவர்களுக்கு உதாரணமாய் தான் செய்து

காட்டினார். அவர் மூன்று முக்கிய காரியங்களை குறிப்பிட்டார். அதற்கு மேலும் குறிப்பிட்டிருக்கலாம். முதலாவது தான் அவர்களுடைய செலவில் புசிப்பதற்கும் குடிப்பதற்கும் உரிமை இருந்த போதிலும், அவர்களிடமிருந்து எந்த பண உதவியையும் மறுத்து விட்டார். அவர் மனைவி இல்லாமல் பிரயாணம் செய்வதையே தெரிந்து கொண்டார். அவருக்கு மனைவியை கூட்டிச் செல்ல உரிமை இருந்த போதிலும், அவர் மனைவி இல்லாமல் செல்வதையே தெரிந்து கொண்டார். அவருடைய மூன்றாவது காரியம் முதலாவதுடன் தொடர்புடையது. பொருளாதார உதவியை சபையிலிருந்து பெறுவதற்கு அவருக்கு உரிமை இருந்த போதிலும் தன்னுடைய தேவைக்கு தானே உழைப்பதை தெரிந்து கொண்டார். **கைத்தொழில் செய்யாதிருக்கிறதற்கு எனக்கும் பர்னபாவுக்கும் மாத்திரந்தானா அதிகாரமில்லை?**

கிரேக்க ரோம சாம்ராஜ்ஜியத்திலே, அவர் உயர் தட்டு மக்களுடன் அறியப்பட்டார். எனவே தன் கைகளைக் கொண்டு உழைத்து வாழ்வதற்கு அவரால் மறுப்பு தெரிவிக்க முடிந்தது. அவர் நன்கு படித்திருந்தார். அவருடைய குடும்பம் செல்வந்த குடும்பமாய் இருந்தபடியால், தர்சு பட்டணத்திலிருந்து எருசலேமிற்கு சென்று பிரசித்தி பெற்ற போதகர்களிடம் கற்றுக் கொள்ள முடிந்தது (அப். 22:3). அவர் ரோம குடியுரிமை பெற்றிருந்தார். அது அவருக்கு பரம்பரை கௌரவமாக இருந்தது (அப். 22:28). கொரிந்து சபை கிறிஸ்தவர்கள், இப்படிப்பட்ட ஒருவர், ரோம சாம் ராஜ்ஜியத்திலே ஒரு முக்கியமான மனிதராய் இருந்தவர், இப்பொழுது தன் செலவிற்காய், தானே உழைத்து சம்பாதித்துக் கொள்வார் என நினைக்கவில்லை. வசதி படைத்த ரோமர்களை பொறுத்தவரை வேலை என்பது அடிமைத்தனத்தையே குறிக்கிறது, தானே செய்யும் வேலையையல்ல.[4]

தங்களுடைய போதகத்திற்காய், பண உதவி பெற்றுக் கொள்வது, சபை வழக்கத்தில் ஒன்றாகும். ஆனால், பவுலும் பர்னபாவும் கடவுளுடைய ஊழியத்திற்காய் அதை மறுத்து விட்டனர். அவர்களுடைய மறுப்பு மற்ற கிறிஸ்தவர்களுக்கு, ஒரு முன் உதாரணமாக இருந்தது. கொரிந்தியர்கள் அஞ்ஞான கடவுள்களை வழிபடுவதை நியாயப்படுத்திய போதிலும், அப்போஸ்தலர்களால் அதற்கு மறுப்பு சொல்ல முடிந்தது. (இந்த சலுகையை பவுல் அவர்களுக்கு கொடுக்கவில்லை.)

**வசனம் 7.** சபை மக்களிடமிருந்து, புசிப்பதற்கும் குடிப்பதற்கும், உதவி பெறும் உரிமையை கோருவதற்காய், அப்போஸ்தலர் மூன்று கேள்விகளை வைக்கிறார். அந்த கேள்விகளுக்கு உடனடி பதில் “யாருமில்லை.” ஆம் போர் வீரனை தெரிந்தெடுத்தவர்கள், அவனுடைய **பண** தேவைகளை சந்தித்தனர். ஒவ்வொரு விவசாயிக்கும் தன் திராட்ச தோட்டத்தின் **கனியை புசிப்பதற்கு** உரிமை இருந்தது.

இயற்கையாகவே, மந்தை வைத்திருப்பவர், அந்த **மந்தையி**லிருந்து கிடைக்கும் **பாலை** உபயோகிப்பார். போர் வீரனும், விவசாயியும் தங்கள் உழைப்புக்கேற்ற பலனை எதிர்ப்பார்ப்பார்கள்.

"செலவு" (ὀψώνια, *opsōnia*) என்கிற பதம் "கூலி" என்பதையே பல இடங்களில் குறிக்கிறது என்று பவுல் விளக்குகிறார். ஒரு போர் வீரனின் தேவைகள், அவனுடைய ஆயுதங்கள், உணவு, செருப்புகள், உடைகள் மற்றும் கூடாரத்தை உள்ளடக்கியதாகும். பவுலின் உருவகத்தில், கடவுளுடைய ராஜ்ஜியத்தில் பணி செய்வது, பணியில் உள்ள போர் வீரனுக்கு ஒத்தது, திராட்சை தோட்டக்காரர், தன் தோட்டத்தை பராமரிப்பது போன்றது, மேய்ப்பன் தன் மந்தையை பராமரிப்பது போன்றது. அவர்களுடைய பொருளாதார தேவைகளை மறுப்பது நியாயமற்றது.

போர் வீரன், தோட்டக்காரன் மற்றும் மேய்ப்பரைப் போலல்லாமல், பவுல் தான் செய்த வேலைக்கு கூலி பெறும் நிலையில் இருந்த போதும், அதை மறுத்து விட்டார். கடவுள் அளித்த முக்கியமான பணிக்காய், தன் முழு பெலத்தையும் உபயோகப்படுத்திய போதிலும், தன் சொந்த தேவைகளை, தானே உழைத்து சம்பாதித்தார். பவுல் தன் உரிமைகளை ஆதரித்து அவற்றை எடுத்துக்கூறி வந்த போதிலும் அதை பெற மறுத்து விட்டார். தன்னுடைய ஆவிக்குரிய தலைமையை, கொரிந்து சபையினிடமிருந்து தன் உழைப்பிற்காய் பணம் பெறுவது தடையாய் இருக்குமென்பதால், அதை மறுத்து விட்டார். கிறிஸ்தவ சுதந்திரத்தை, விக்கிரக ஆராதனைக்கும், அவற்றிற்கு படைக்கப்பட்டவைகளை புசிப்பதற்கும் பயன்படுத்தக்கூடாது என்பதே அப்போஸ்தலரின் போதனையாயிருந்தது, தன் உரிமைகளை உபயோகிப்பதின் மூலம், கிறிஸ்தவ போதனை களிலிருந்து விலகிச் செல்லும் எந்தக் காரியத்திலும் ஈடுபடக் கூடாது.

சுவிசேஷத்தை பிரசங்கம் செய்பவர்களுடைய தேவைகளை, சபை சந்திக்க வேண்டிக் கொண்டார். கொரிந்து பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்கள், பவுல் கொடுத்த கடவுளின் நற்செய்தியின் மூலம் இரட்சிக்கப்பட்டார்கள், நல்லதொரு வாழ்க்கை வாழ்வதின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இலவசமாய் சுவிசேஷத்தைப் பெற்றுக் கொண்ட படியால், அந்த சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்லும் பணியை தாங்குவதற்கு உற்சாகமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் அதன் மூலம் தாங்கள் பெற்ற ஆசீர்வாதத்தை மற்றவர் களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள்.

சுவிசேஷத்தை பிரசங்கிப்பவர்கள் அதன் மூலம் வாழ வேண்டும் அழுத்தமாய் சொல்வதின் மூலம், விக்கிரக ஆராதனை, சுதந்திரம் மற்றும் விக்கிரகத்திற்கு படைக்கப்பட்டவைகளை புசிப்பது போன்ற காரியங்களை பின்னுக்கு தள்ளி விட்டார். எப்படி சபையாரிடமிருந்து உதவி பெறுவது முக்கியமானதாக இருந்ததோ, அதைப் போன்றே

அதை மறுப்பதும் இருந்தது. அதற்கான காரணத்தை கொரிந்து சபை மக்கள் தெரிந்து வைத்திருந்தனர். அதை நேரடியாக எழுத்தில் குறிப்பிடாத போதும், அதை விளக்குவதின் மூலம், அதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார்.

சுவிசேஷத்தை பிரசங்கிப்பவர்கள், சபையிலிருந்து உதவி பெறுவது சரி என்று சொல்லி, வசனத்தில் நிரூபிக்கப்பட்ட காரியங்களுக்கு நேராய் அவர்களை திருப்புகிறார். சுவிசேஷத்தை பிரசங்கிப்பவர்கள் அதன் மூலம் வாழ வேண்டுமென்பதை கடவுள் தெளிவாக விளக்குகிறார்.

## ஒருவருடைய செயல்களிலிருந்து பலன் பெறுவது (9:8-14)

**8இவைகளை மனுஷர் வழக்கத்தின்படி சொல்லுகிறேனோ?
நியாயப்பிரமாணமும் இவைகளைச் சொல்லுகிறதில்லையா?
9போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்று மோசேயின்
பிரமாணத்திலே எழுதியிருக்கிறதே. தேவன் மாடுகளுக்காகவே
கவலையாயிருக்கிறாரோ? 10நமக்காகத்தான் இதைச்
சொல்லுகிறாரோ? உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும்,
போரடிக்கிறவன் தன் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற
நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே, ஆகையால், அது
நமக்காகவே எழுதியிருக்கிறது. 11நாங்கள் உங்களுக்கு
ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை
அறுத்தால் அது பெரிய காரியமா? 12மற்றவர்கள் உங்களிடத்திலே
இந்த அதிகாரத்தைச் செலுத்தினால், அவர்களிலும் நாங்கள்
அதிகமாய்ச் செலுத்தலாமல்லவா? அப்படியிருந்தும், கிறிஸ்துவின்
சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள்
இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப்பாடும் படுகிறோம்.
13ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில்
புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை
செய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும்
அறியீர்களா? 14அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச்
சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும்
கட்டளையிட்டிருக்கிறார்.**

வசனம் 9:8-10ல் போரடிக்கிற மாட்டை கொண்டு வேண்டுகோள் வைக்கிறார், சுவிசேஷத்தை பிரசங்கிப்பவர்கள் அதில் பங்கெடுக்க வேண்டும் என்பதற்கு 8:1ல் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளைக் குறித்த விஷயத்தில் என்பதைச் சுற்றி எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதில் தரும் வகையில் இவைகளை குறிப்பிடுகிறார். விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை புசிப்பதோ, அல்லது சடங்காச்சாரங்களில் பங்கெடுப்பதோ விக்கிரக

ஆராதனையேயாகும். எப்படிப்பட்ட அறிவும் மன நிலையும் அதை மாற்றாது. இன்னமும் அதை ஏற்றுக் கொள்ளாதவர் களிடம், அவர்களுடைய முன் உதாரணம் வெளிப்படையாக செய்யும் காரியங்களுக்கும், குறிப்பிட்ட மனநிலையில் செய்யும் செயல்களுக்கும் உள்ள வித்தியாசத்தை அவர்களின் அறிவு உணராமலிருப்பதாக அப்போஸ்தலர் கூறுகிறார். அவர்களின் அறிவு பலமில்லாதவர்களை அழித்துப் போடும்.

பவுல் தன் சொந்த வாழ்க்கையில் நடந்தவைகளை எடுத்துக் காட்டுவதின் மூலம் தன் போதகங்களை மீண்டும் உணர்த்துகிறார். கொரிந்து சபை கிறிஸ்தவர்களுக்கு, விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவைகளை புசிப்பதற்கு கொடுக்கப்பட்ட அழுத்தம், அதே போன்ற சூழ்நிலையில் தன் நடவடிக்கைகளை மற்றவர்களுக்காக மாற்றிக்கொள்ளும் அப்போஸ்தலருக்கு உண்டான அழுத்தத்தை விட அதிகமாக இருந்தது. அதில் வெளிப்படையாக தெரிவது, தனக்கு உரிமை இருந்த போதிலும், சபை மக்களிடமிருந்து தன் தேவைகளுக்கு பொருளாதார உதவியை ஏற்றுக் கொள்ளாதது. அவருடைய வாழ்க்கை அனுபவங்களும், வசனமும், மன திருப்தி அடைவதற்கு உதவி செய்தது.

இங்கே போரடிக்கிற மாட்டைக் குறித்து, பவுல் குறிப்பிடவில்லை. அப்படித் துன்புறுத்துவது விலங்குகளை வதைப்பதின் கீழ் சேரும் மாறாக தன்னுடைய வழக்காடுதலில், அதன் முக்கியத்துவத்தைச் சொல்வதற்காக இப்படி குறிப்பிடுகிறார்.

**வசனம் 8.** கிறிஸ்து **நியாயப்பிரமாணத்தை** நிறைவேற்ற அதை எடுத்துப் போட்டபடியால், சுவிசேஷம் பிரமாணங்களை கடந்து செல்கிறது என்பதை குறிப்பதற்காகவே, அடிக்கடி நியாயப் பிரமாணத்தை குறித்து எழுதுகிறார் (கொலோ. 2:14). நியாயத்தீர்ப்பின் ஆசீர்வாதத்தையும், “நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு” எடுத்துரைக்க அப்போஸ்தலர் தயங்கவில்லை (கலா. 3:13). நீதிமான் ஆவதற்காய் நியாயப்பிமாணத்தை சார்ந்திருக்கிறவன், “கிருபையை இழந்து போகிறான்” (கலா. 5:4). அதே சமயத்தில் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான் என பவுல் குறிப்பிடுகிறார் (ரோமர் 7:12). சில சமயங்களில், நியாயப்பிரமாணம் கிறிஸ்தவ போதகங்களுக்கு உடன் பட்டிருக்கிறது என குறிப்பிடுகிறார். பிற சமயங்களில் யூதர்களுக்கே உரித்தான இந்த நியாயப்பிரமாணம் தேவையற்றது என குறிப்பிடுகிறார். சபை, ஊழியக்காரர்களை பொருளுதவி செய்து தாங்க வேண்டும் என்பதில் நியாயப்பிரமாணம் துணை நிற்கிறது அதைக் கடந்து தன் முகவுரையில் கூறியது போல, ஒவ்வொரு நாள் செயல்களைக் குறித்து, பவுல் கூறுகிறார்.

**வசனங்கள் 9, 10.** வசனம் 9:9ல் குறிப்பிட்டவைகள் உபாகமம் 25:4ல் இருந்து வருகிறது. உதவியற்றவர்களுக்கும், தேவையுள்ளவர் களுக்கும் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டது,

விலங்குகளுக்கும் பொருந்துவதாய் இருந்தது **போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக** ("தானியத்தை அடுக்கிவை"; NIV), அப்படி செய்தால் கடவுள் இவ்வுலகத்தில் ஏற்படுத்தின நன்னடத்தையை மீறினதாக இருக்கும். விலங்குகளை பாதுகாப்பது குறித்தும் பிரமாணத்தில் இடம் பெற்றிருந்தது. உதாரணமாக, உபாகமம் 22:6, 7ல் குறிப்பிட்டது போல் பறவையை அதன் குஞ்சுகளோடு கொல்லலாகாது. அப்படி ஏதாவது ஒரு பறவை "உதவியற்று விழுந்து கிடக்குமானால்," எதிராளியுடையதாயினும், அதை மீட்க வேண்டும் (யாத். 23:5). எப்படி பிரமாணம் விலங்குகள் மீதுள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறதோ, அப்படி பவுல் ஜனங்கள் மீது தனக்குள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறார். **தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ** என்று கேட்கிறார். இதற்கு சரியான பதில் ஆம் மாடுகள் மீது கவலையாயிருக்கிறார், ஆனால் *அதை விட* மனிதர்கள் மீது அதிக அக்கறை உடையவராயிருக்கிறார். போரடிக்கிற மாட்டைக் குறித்து இன்னும் அதிகமாக விளக்குகிறார். உருவகமான காரியத்தின் மூலம், தன் கைபிரயாசத்தின் பலனை பகிர்ந்து கொள்வதின் உரிமையைப் பற்றி குறிப்பிடுகிறார். உபாகமத்தில் மேலே சொல்லப்பட்டுள்ள பகுதியில் இதைப்பற்றியே குறிப்பிடுகிறார்.

**நமக்காகத்தான் இதைச் சொல்லுகிறாரோ?** என்று பவுல் கேட்கிறார். NASB மொழிபெயர்ப்பில் முற்றிலும் என்ற பதம் நிச்சயமாக என மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. மாடுகள் மீது எவ்வளவு அக்கறை கொண்டவராக இருக்கிறாரோ அதை விட மனுக்குலத்தின் மீது அதிக அக்கறை கொண்டவராக இருக்கிறார். மாடுகள் எப்படி கைப்பிரயாசத்தின் பலனில் பங்கெடுக்கிறதோ, அதே போல் மனிதர்களுக்கும் பங்குண்டு.

**உழுகிறவர் நம்பிக்கையுடன்** செய்ய வேண்டும் **போரடிக்கிறவர்**, மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் **நம்பிக்கையில்** அதை செய்ய வேண்டும். போரடிக்கிற மாடுகளே தங்கள் உழைப்பின் பலனை அனுபவிக்குமானால், மனிதர்கள் தங்கள் உழைப்பின் பலனை எவ்வளவு அதிகமாக அனுபவிக்க வேண்டும்.

இப்படிப்பட்ட உதாரணங்களை பவுல் குறிப்பிட்ட பின், தான் யாரிடம் சுவிசேஷத்தை பகிர்ந்து கொண்டாரோ, அவர்கள் தங்களின் உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும் என அழுத்தமாக குறிப்பிடுகிறார். மற்றவர்களைப் போலல்லாமல், அவர்களுடைய உதவியை பெறுவதற்கு பவுலுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. ஆனால் அப்படி உதவி பெறுவது, சில சகோதரர்களுக்கு இடறலாயிருக்கும் என்ற காரணத்தால், பவுல் அதை மறுத்து விட்டார். கொரிந்து சபை மக்கள் பவுலைப் பின்பற்றி, விசுவாசத்தில் குறைவுள்ளவர்களிடம் அதிக அன்பும், சுகக்குறையும் கொண்டிருந்தார்கள். விக்கிரக ஆராதனை எப்படி ஒத்துக் கொள்ளக்

கூடியது என்று நினைத்தார்கள் என்பதை பவுல் மறைக்கவில்லை. சத்தியத்தை நன்கு அறிந்தவர்கள், விசுவாசத்தில் குறைவுள்ள கிறிஸ்தவர்களுக்காக, எப்படி அந்த பழக்க வழக்கங்களை விட்டு விட்டார்கள் என்பதை எடுத்துச் சொல்கிறார்.

**வசனம் 11.** 9:8-14ல், பவுல் கொரிந்து சபை மக்களிடமிருந்து பணம் பெற்றுக் கொள்வதற்கு மறுப்பு தெரிவித்ததைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. சில கொரிந்தியர்கள், பவுல் தனக்கு **உலகப்பிரகாரமான காரியங்களை** (τὰ σαρκικά, *ta sarkika*) அதிகமாக கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார் என்று நினைத்தார்கள். வெளிப்பிரகாரமான தோற்றத்தின்படி, ஊர் ஊராய் போய்க் கொண்டிருக்கும் மற்ற தத்துவ ஞானிகளைப் போல் பவுல் காணப்பட்டார். தங்களைத் தாங்களே போதகர்கள் என்று சொல்லிக் கொண்டவர்கள் தங்கள் போதனை எப்படி இருந்த போதிலும், தங்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமென எதிர்பார்த்தார்கள். இவர்களோடு ஒப்பிடுவது பவுலுக்கு வருத்தம் அளித்த போதிலும், சுவிசேஷத்திற்காய், தனக்குக் கிடைத்த எல்லா உதவிகளையும் மறுத்து விட்டார். தனக்குக் கிடைத்தவற்றில் திருப்தி அடைந்து கொண்டார். அல்லது தன் தேவைகளுக்கு தானே உழைத்து சம்பாதித்துக் கொண்டார். அவரின் இந்த முடிவு அவரை எதிர்ப்பவர்களை அமைதிப்படுத்தியது. ஆனால் கொரிந்து பட்டணத்திலிருந்த மற்றவர்கள் அதை எதிர்த்தார்கள். தங்களிடமிருந்து உதவியை மறுத்து விட்டு மற்றவர்களிடம் இருந்து ஏற்றுக் கொள்வதை அவர்கள் மரியாதை குறைவாய் நினைத்தார்கள் (2 கொரி. 11:8).

பவுல் **ஞானநன்மைகளை** (τὰ πνευματικά, *ta pneumatika*) கொரிந்து சபை விசுவாசிகளிடையே விதைத்தார் (காண்க லூக். 8:11; அப். 18:4 காண்க). எல்லா மக்களின் விடுதலைக்காக, எப்படி கடவுள் தன்னை யூதர்களின் முன்னோர்களுக்கு வெளிப்படுத்தினார் என்பதை, கிரேக்க மக்களுக்கு எடுத்துக்கூறினார். இல்லாத கடவுளுக்காக கிரேக்க கோயில்களும், உருவங்களும் எழுப்பப் பட்டிருந்தன. அது அவர்களுக்கு ஒரு கசப்பான உண்மை யாயிருந்தது. கிரேக்கர்களுக்கு ஒரு வழியிலும், யூதர்களும் மற்றொரு முறையிலும் போதகம் செய்ய வேண்டியதாயிருந்தது. யூதர்கள் நெடுங்காலமாய் எதிர்பார்த்த மேசியா வந்து விட்டார் என்பதை அவர்களுக்கு அழுத்தம், திருத்தமாக கூறி வந்தார். தாவீதைப் போல போர் வீரனாய் இல்லாமல் நசரேயனாகிய இயேசு கிறிஸ்து இரட்சகராய் வந்தார். பவுல் கிருபையின் செய்தியை அவர்களிடையே விதைத்தார். “கிறிஸ்து பாடு அனுபவிப்பது அவசியமாயிருந்தது ... மகிமைக்குள் நுழைவதற்கு” (லூக். 24:26; காண்க அப். 17:3). அநேக ஜனங்கள் தங்கள் பாவம், எதிர்ப்பு, மரணத்திலிருந்து திரும்பி சுவிசேஷத்திற்கு செவி கொடுத்தார்கள். “கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து,

ஞானஸ்நானம் பெற்றார்கள்” (அப். 18:8). அப்போஸ்தலர்கள் கொடுத்த எந்தவொரு “சரீரநன்மைகள்” அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற பெரிய ஆசீர்வாதத்துடன் ஒப்பிடும் போது, மிகவும் சிறியதாயிருந்தது (1 கொரி. 9:11).

**வசனம் 12.** பவுலின் அப்போஸ்தலத்துவத்தை, அவருடைய எதிரிகள் எதிர்த்த பொழுது, பவுல் அவர்களுக்கு கொடுத்த பதிலில் அவரின் கொள்கைகள் பிணைந்திருந்தது. அவருடைய உரிமைகளைப் பெறுவதற்காய் தன் காரியங்களை சொல்லவில்லை. அந்தக் காரியம் முடிவுற்றிருந்தது (9:15); கொரிந்து சபை சகோதரர்களிடமிருந்து பொருள் ஆதாரத்தை அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். **கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு** பவுல் எந்தவித தடையும் ஏற்படாமல், மற்றவர்களுடைய பொருள் ஆதரவு பெறும் உரிமையை பெற்றிருந்தார். உதவி பெறுவது மற்றவர்களைப் போல் அவருக்கு உரிமை இருந்த போதிலும், பவுல் உதவி பெறுவதை மறுத்து விட்டார். சொல்லப்போனால் அவருக்கு மற்றவர்களை காட்டிலும் அதிக உரிமை இருந்தது. உதவி பெறும் உரிமையை எடுக்கப்போவதில்லை என்று அப்போஸ்தலர் எடுத்த திடமான நிலை, பலவீனமான கிறிஸ்தவர்களுக்கு உதவுவதை விட பெரிதல்ல என்பதை உணர்த்துகிறது.

**மற்றவர் உங்கள்** மீது உரிமை கோருகின்றனர் என்று குறிப்பிடும் போது, மற்றவர் என்று யாரைக் குறிப்பிடுகிறார் என்பது தெளிவாக இல்லை. பொருளாதார உதவி செய்த சிலரைப் பற்றிக் குறிப்பிடுகிறாரா? அப்பொல்லோ அப்படிப்பட்டவராக இருந்திருக்கலாம் (3:5, 6) ஆனால் அவர் நெடுநாள் அந்தப்பட்டணத்தில் தங்கியிருக்கவில்லை (16:12). பவுல் தன் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் கொள்கைகளை தவிர மற்றவற்றை கொடுக்க விரும்பவில்லை. அதிகப்படியாக, கொரிந்தியர்கள் யாரெல்லாம் அவர்களுக்கு கிறிஸ்துவைப் பிரசங்கம் செய்தார்களோ, அவர்களையெல்லாம் தாங்கியிருக்கலாம். தான் பொருளாதார உதவியை மறுப்பதால், அப்போஸ்தலத்துவத்தை இழந்து விட்டார் என்று சொல்பவர்களிடம், தன் நிலையை மீண்டும் தெளிவு படுத்தினார். தான் பிரசங்கித்த சுவிசேஷத்திற்கு எந்தப் பங்கமும் வந்து விடக் கூடாது என்பதற்காக அவர்களிடமிருந்து பொருளாதார உதவியை மறுத்து விட்டார்.

பவுல், தான் கொரிந்தியர்களிடமிருந்து உதவி பெறுவது, தன் செயல்களின் பல்லை நீர்த்துப் போகச் செய்யும் என ஏன் நினைத்தார்? அதற்கான விளக்கத்தைக் கொடுக்கவில்லை. சொல்லப்போனால் தன் தொந்த நன்மைக்காய், பவுல், இப்படிப்பட்ட காரியங்களை ஏற்றுக் கொள்வதில்லை என்பது போன்ற பிரச்சனைகள் கொரிந்து சபையில் எழுந்தது. எல்லோரும் அதை ஏற்றுக் கொள்ளாத போதிலும்,

அவர்களுக்கு பொதுவான ஒரு கருத்து இருந்தது. சுவிசேஷத்திற்காய் பொருளாதார உதவி பெற்றேன் என்று ஒருவரும் சொல்லக்கூடாது என்பதில் உறுதியாய் இருந்தார். அதற்காய் **எல்லாவற்றையும்** சகித்துக் கொள்ள தயாராக இருந்தார். தன் சொந்த தேவைகள் ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு தடையாய் இருக்கக்கூடாது என்பதில் உறுதியா யிருந்தார்.

இவையெல்லாம் இருந்த போதிலும், சபை தனக்கு சில வழிகளில் உதவி செய்யலாம் என நினைத்திருக்கலாம் 16:6ல் தன் குளிர் கால திட்டத்தைக் குறித்து எழுதுகிறார். அங்கு தங்கியிருந்த கடைசி நாட்களில் "நான் எங்கே போனாலும் நீங்கள் என்னை வழி விட்டனுப்பும்படிக்கு" என்று குறிப்பிடுகிறார் (16:6; காண்க 2 கொரி. 1:16) "எங்கே போனாலும்" "என்னை வழியனுப்பி விடும் படிக்கு" என்று குறிப்பிடுவதின் மூலம் தன் பொருளாதார தேவை களைக் குறித்து குறிப்பிடுகிறார் (காண்க ரோமர் 15:24) பவுல் மற்ற இடங்களுக்கு செல்வதற்காய், பொருளாதார உதவியை ஏற்றுக் கொள்ள நினைத்திருக்கலாம். ஆனால் கொரிந்து பட்டணத்தில் தங்கியிருந்த போது, தன் தேவைகளுக்காக அல்ல.

**வசனம் 13.** 9:12ல் தன் காரண காரியங்களையும், சாட்சியத்தையும் நிறைவு செய்த பின்பும், மீண்டும் தொடங்குவது போல் தோன்றுகிறது 9:13, 14ல் உள்ள விளக்கங்கள் 9:8, 9 பின் பொருந்துவதாக உள்ளது. 8ம் அதிகாரத்தில் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட வைகளை புசிப்பதையும், இப்படிப்பட்ட எண்ணங்க ளையும் தொடர்பு படுத்தும் படியாய், இந்தக் காரியங்களை இங்கே குறிப்பிடுகிறார். அவர்களிடமிருந்து உதவி பெறுவதை மறுத்தது. பெரிய வழக்காடுதலில் அவருக்கு உதவி செய்தது, விசுவாசத்தில் மற்றும் அறிவில் குறைவுள்ள கிறிஸ்தவர்களுக்காக, மற்றவர்கள் கிறிஸ்துவினுடைய ஆவியை உடையவர்களாய் நடக்க வேண்டு மென வலியுறுத்துகிறார்.

கிரேக்க மனப்பான்மையுடன், புனித சேவை செய்தவர்கள், பலிபீடத்தில் உதவி செய்த குருமார்களுக்கு ஒப்பாய் இருக்கிறார் கள். கிரேக்க பட்டணத்தில் இருந்த, தவறான வழி போதகர்களுக்கு, ஆரோன், சாதோக்கைப்போல பரம்பரையாய் வரும் ஆசாரியத் துவம் இருக்கவில்லை. அதற்கு அவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டார்கள், நியமிக்கப்பட்டார்கள் அல்லது வாங்கப்பட்டார்கள்,[5] கிரேக்கர்களுக்கு, ஆசாரியராய் பணி செய்வது மற்ற பணியைப் போன்றது. அந்தப் பணியில் சலுகைகளையும், பொருளாதார நன்மைகளையும் எதிர்பார்க்கலாம்.

பவுல், ஆசாரியருக்குரிய முக்கியமான உரிமையைக் குறித்து இங்கே குறிப்பிடுகிறார்: பலி செலுத்தப்பட்டவைகளின் ஒரு பகுதியை தங்களுக்கென வைத்துக் கொண்டார்கள். பரிசுத்த சேவை செய்வோர்

கோவிலின் உணவை சாப்பிடுவர் என்ற பொதுவான அறிவை அப்போஸ்தலர் மற்றவர்களுக்கும் இதையே வலியுறுத்து கிறார். ஆசாரியர்கள் செய்யும் வேலையும், சுவிசேஷகர்கள் செய்யும் வேலையும் ஒத்ததாய் இல்லாமல் இருந்த போதிலும், அவருடைய கருத்தை அழுத்தமாக சொல்வதற்கு அது பயன்படுகிறது.

**வசனம் 14.** யூத மார்க்கத்திலும் அஞ்ஞானிகளுடைய மார்க்கத்திலும் பின்பற்றப்பட்ட நடைமுறை என்னவென்றால், பலிபீடத்தில் பணி செய்பவர்கள் அதில் படைத்தவைகளில் ஒரு பகுதியை எடுத்துக் கொள்ள அவர்களுக்கு உரிமை உண்டு என்பதே. அதே தத்துவம் கிறிஸ்தவ பணிக்கும் பொருந்துவதாக உள்ளது. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் பணிக்கும், ஆசாரிய பணிக்கும் முழுமையான ஒற்றுமை இல்லாத போதும், அவற்றின் அடிப்படை கொள்கைகள் ஒன்றே. அந்த உருவகம் மிகச்சரியாக இல்லாத போதும், தேவனுடைய வார்த்தை அதில் சந்தேகம் கொள்ள அனுமதிக்கவில்லை. **அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்.** பவுல் இங்கே குறிப்பிடுவது தேவன் அவரோடு நேரடியாக பேசியதாக இருக்கலாம். ஆனால் அது சுவிசேஷத்தில் குறிப்பிடப்படவில்லை. அல்லது, இயேசு கிறிஸ்து தம் பன்னிரெண்டு சீஷர்களை இஸ்ரவேலருக்குள் ஊழியம் செய்ய அனுப்பியபோது கூறியதை, நடைமுறை படுத்துவதாகக் கூட இருக்கலாம். “எந்த பட்டணத்தி லாவது கிராமத்திலாவது நீங்கள் பிரவேசிக்கும் போது, அதிலே பாத்திரமானவன் யாரென்று விசாரித்து நீங்கள் புறப்படுமளவும் அவனிடத்தில் தங்கியிருங்கள்” (மத். 10:11).

ஆரம்ப திருச்சபைக்கு, பரம்பரை பரம்பரையான, சிறந்த போதகர் இல்லாத போதும், தங்களை சபைக்காய் அர்ப்பணித் தவர்களின் போதனைகள் மற்றும் சபையை கட்டியெழுப்பும் செயல்கள் மூலம், சபையார் பயன் அடைந்தனர். முழு நேர ஊழியர் களாய் தங்களை அர்ப்பணித்தவர்களை, சபையார் தாங்க வேண்டு மென தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது (காண்க கலா. 6:6).

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர்கள், அதிலிருந்தே தங்கள் வாழ்க்கையின் தேவைகளை சந்திக்க வேண்டும் என தேவன் சொன்னால் அதற்கு மாற்று வழி ஏதேனும் உண்டா? “அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப்பாடும் படுகிறோம்” (1 கொரி. 9:12) என எந்த அதிகாரத்தைக் கொண்டு பவுல் இப்படி எழுதுகிறார்? தேவன் சொல்லுகிறதை செய்யத்தானே வேண்டும்? கார்லேண்ட் என்பவர் இந்தக் கேள்விகளுக்கு இப்படியாக பதில் கூறுகிறார் “கடவுளுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாததாக [பொருளாதார உதவி மறுப்பதின் மூலம்] எடுத்துக் கொள்ளவில்லை;

மாறாக அதை மறுப்பதற்கான உரிமையாக பவுல் எடுத்துக் கொள்கிறார்."[6] முழு நேர ஊழியருக்கு சபையாரிடமிருந்து உதவி பெறுவதற்கு உரிமை இருக்கிறது ஆனால் கட்டாயம் இல்லை. பவுல், அப்படி உதவி பெறுவது ஊழியத்திற்கு தடையாக இருக்குமானால் அதை மறுக்கலாம்.

## நல்லதொரு உக்கிராணக்காரனாய் இருப்பது (9:15-18)

**15அப்படியிருந்தும், நான் இவைகளில் ஒன்றையும் அநுபவிக்க
வில்லை; இப்படி எனக்கு நடக்கவேண்டுமென்று இவைகளை நான்
எழுதுகிறதுமில்லை. என் மேன்மை பாராட்டலை ஒருவன்
அவத்தமாக்குகிறதைப்பார்க்கிலும் சாகிறது எனக்கு நலமாயி ருக்கும்.
16சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு
இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது;
சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. 17நான்
உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு;
உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம்
எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே. 18ஆதலால் எனக்குப் பலன்
என்ன? நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையில் அதைப்பற்றி எனக்கு
உண்டாயிருக்கிற அதிகாரத்தை முற்றிலும் செலுத்தாமல், கிறிஸ்துவின்
சுவிசேஷத்தைச் செலவில்லாமல் ஸ்தாபிப்பதே எனக்குப்பலன்.**

கொரிந்து சபையாரின் சூழ்நிலைகளையும், தாம் அந்த சபையோடு கொண்டிருந்த உறவையும் பார்த்த பின்பு, உதவி பெற வேண்டாம் என முடிவு செய்தார். பின் ஏன் அந்த சபையின் ஆவிக்குரிய வளர்ச்சியை மற்றவர்களிடம் விட்டுச் செல்லவில்லை? அதை விளக்குவதற்கு பல தடைகள் உள்ளதாக பவுல் நினைத்தார்.

கிறிஸ்துவின் மற்ற எல்லா ஊழியக்காரர்களைப் போல, பவுலுக்கும் சபை மக்களிடமிருந்து பொருளாதார உதவி பெற உரிமை இருந்தது (9:7). இருந்த போதும், கிறிஸ்துவின் ஊழியக்காரருக்கு கொடுக்கப்பட்ட உதவித்தொகை, தச்சுவேலை செய்பவரையே அல்லது தொழிற் சாலையில் வேலை செய்பவரின் சம்பளத்தை விட குறைவாகவே இருந்தது. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர் தேவைப்பட்டால் ஏதாவது ஒரு வேலை செய்து சம்பாத்தியம் செய்யலாம் ஆனால் தேவ ராஜ்ஜியத்தின் பணியை விட்டு விடவே முடியாது. ஆத்துமாக்களுக்காய் அவரின் தாகம், தனக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தை பொறுத்து அமையக்கூடாது. பவுலுக்கு, பிரசங்கம் செய்வது அதிக தேவையாக இருந்தது. தேவன் அவரிடம் ஒரு உக்கிராணக்காரனின் பணியை எதிர்பார்த்தார்.

இயேசு வாழ்ந்த வாழ்க்கையின் மாதிரியைப் பின்பற்றி தன் வாழ்க்கையை வாழ பவுல் விரும்பினார் (யோவான் 13:14, 15). எப்படி

இயேசுவின் ஊழியத்திற்கு உதவி செய்தார்களோ (லூக். 8:3) அப்படியே பவுலின் ஊழியத்திற்கும் உதவி செய்தார்கள் (2 கொரி. 11:8, 9) ஆனால் அவர்களின் ஊழியம், தனக்கு கொடுக்கப்பட்ட சம்பளத்தைப் பொறுத்து அமையவில்லை. இயேசுவை சார்ந் திருக்கும் பொருட்டு "நான் எல்லோருக்கும் எல்லாமானேன்" (1 கொரி. 9:22) என்று பவுல் சொல்கிறார். இப்படிப்பட்ட நிலையிலே கிறிஸ்துவுக்காய் சில ஆத்துமாக்களை சம்பாதித்தார். அப்போஸ்தலருக்கு அது போதுமான சம்பளமாக இருந்தது.

**வசனம் 15.** கொரிந்து சபையிடமிருந்து பண உதவி பெறுவதை மறுப்பதற்கான காரணங்களை தெளிவாக கூறியிருந்தார். அப்படி பெறுவது "கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு தடையாய் இருக்கும்" என கருதினார் (9:12). அப்படி மறுத்த போதிலும், கொரிந்து சபையில் சிலர் "பணம் கொடுத்து பாருங்கள். எடுத்துக் கொள்கிறாரா அல்லது மறுக்கிறாரா என்று பார்ப்போம்" என்று சொல்லியிருக்கலாம். அவர்கள், கொரிந்திவிலுள்ள தத்துவ ஞானிகளை பார்த்திருந் தார்கள். பவுலுடைய பிரசங்கம் மற்றவர்களைப் போல் அல்லாமல் இருந்த போதிலும், அந்தப் பட்டணத்திற்கு வந்த சில குதர்க்கவாதிகளைப் போன்று இருந்ததாக சிலர் கருதியிருக்கலாம். தன்னைப்பற்றின சந்தேகங்களும், குற்றச்சாட்டுகளும் பவுலுக்கு நன்றாக தெரிந்திருந்தது. வார்த்தையினால் அவர்களை உபயோகப் படுத்துவதாக நினைத்தவர்களுக்கு பவுல் ஒரு நிச்சயத்தை கொடுக்கிறார். "நான்" (ἐγώ, *egō*) என்ற உணர்ச்சிகளோடு குறிப்பிடும் வார்த்தை, என்னுடைய வாழ்க்கையில் **இப்படி எனக்கு நடக்கவேண்டுமென்று இவைகளை நான் எழுதுகிறதுமில்லை.**

கொரிந்தியர்களிடமிருந்து பண உதவி பெறுவதை விட **சாவது** மேல் என்பது பவுலின் உச்சகட்ட கூற்றாகும். பவுல் கொரிந்தியர்களிடமிருந்து பணத்தை ஏற்றுக்கொள்வதை மறுப்பது அவ்வளவு முக்கியமானதா? அல்லது அவரின் பெருமை அதற்கு தடையாக இருக்கிறதா? நான் பெருமையடைகிறேன் என்று சொல்வதின் மூலம் அது நிச்சயமற்றதாக இருக்கிறது. இன்றைய கால கட்டத்திலே "பெருமை" என்பது தன்னுடைய திறன் பற்றியோ கர்வம் அல்லது பெருமிதம் கொள்வதாகும். அப்படி கர்வம் கொள்கிறவர்தான் மற்றவர்களை விட அதிகம் வைத்திருப்பதாக காட்ட ஆசைபடுகிறார். ஆனால் கர்வம் என்பதற்கு கிரேக்க மொழியில் இல்லாததைப் போல் (καύχημα, *kauchēma*) ஆங்கிலத்தில் ஒரு எதிர் மறையான அர்த்தம் உண்டு. அப்படி கர்வம் கொண்டவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கிரேக்க சொற்பொழிவாளர்கள், தங்கள் மாணவர்களுக்கு எப்படி தங்கள் செல்வத்தின் மூலம் சுயமரியாதை, மற்றும் பொது சேவையை காண்பிப்பது என்பதை சொல்லிக் கொடுத்தார்கள்[7] அதே சமயம் அதில்

எப்படி கர்வம் கொள்வது என்பதையும் சொல்லிக் கொடுத்தார்கள்.

மற்றவர் **என் மேன்மைபாராட்டலை ஒருவன் அவத்தமாக்கு கிறதைப்பார்க்கிலும் சாகிறது எனக்கு நலமாயிருக்கும்** என்று குறிப்பிடுவதின் மூலம் தன் சொந்த உணர்ச்சிகள் மட்டுமே பிரச்சனை இல்லை என்று பவுல் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு தடை ஏற்படுத்துவதை விட மரிப்பதே மேல் என்று குறிப்பிடுகிறார் (9:12). அங்கே வரும் தத்துவ ஞானிகளுடன் பவுலை ஒப்பிடுவது, ஜனங்கள் எப்படியாவது சுவிசேஷத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற அவரின் ஆவலோடு இணைந்ததாக இருக்கிறது. தன்னைப்பற்றி ஜனங்கள் கொள்ளும் கருத்து சிலுவையின் சுவிசேஷத்தை கேட்பதற்கும் அதற்கு கீழ்ப்படிவதற்கும் எந்த அளவிற்கு உதவி செய்யும் என்பதை அறிந்திருந்தார்.

**வசனம் 16.** கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கம் செய்வது, கர்வம் கொள்ள இடமளிக்கவில்லை. நான் **சுவிசேஷத்தை பிரசங்கம்** செய்யும் பொழுது அதில் **மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை**. ஏனென்றால் **அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது** என்று குறிப்பிடுகிறார். பிரசங்கிப்பது பவுலுக்கு "கடமையாயிருக்கிறது" ஒரு விஷயமாக இருந்ததால், அப்படி செய்கிற போது, சம்பளம் பெறாமல் பிரசங்கம் செய்வதில் மட்டுமே பெருமையடைய இயலும். அந்த மக்களிடமிருந்து உதவி பெற மறுத்தது, அவருடைய சொந்த விருப்பமாயிருந்தது. அது அவருடைய சுய மரியாதையோடும், அந்தப் பட்டிணத்து கிறிஸ்தவ மக்கள் அவர் மீது வைத்திருந்த மதிப்போடும் தொடர்புடையதாயிருந்தது.

அவர் மீது வைக்கும் நம்பிக்கையும், சுவிசேஷத்தின் மேல் வைக்கும் நம்பிக்கையும் தொடர்புடையதாயிருக்கிறதென பவுல் அறிந்திருந்தார். பிரசங்கம் செய்வது அவரின் விருப்பமாயிருக்க வில்லை. பெருமை கொள்ளவும் அது காரணமாயிருக்கவில்லை. **சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ** என்று சொல்லுகிறார். கிறிஸ்துவின் அழைப்பும், சபைக்கு கிறிஸ்து கொடுத்த பணியை ஏற்றுக் கொண்டதால், பவுல் பிரசங்கம் செய்வது கடமையாக இருந்ததால், அவர்களிடமிருந்து பணம் பெற்றுக் கொள்வதற்கல்ல, ஏனென்றால் அது குற்றப்படுத்த வழிவகை செய்யும்.

**வசனங்கள் 17, 18.** பவுல், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு தானாகவே தன்னை கொடுத்ததற்கும், "பெருமை" கொள்வதற்கும் தொடர்பிருந்தது. பொருளாதார உதவி பெறாமல் பிரசங்கம் செய்தது எனக்கு **பரிசு உண்டு** என்று சொல்ல அனுமதித்தது. கொரிந்து சபையில் விமர்சனம் செய்து வந்த சிலருக்கு, அவருடைய நோக்கம் நல்லது என்பதை நிரூபிக்கும்படியாக இருந்தது. அப்படி பொருளாதார உதவி பெற மறுத்த படியால் அவருக்கு கிடைத்த பரிசு சுய மரியாதை. கிறிஸ்து சிலுவையில் சம்பாதித்த இரட்சிப்பும் இந்த பரிசும்

வேறானவை. அது பவுலுக்கும் கொரிந்து சபை மக்களுக்கும் சம்பந்தம் உள்ளதாய் இருந்தது.

பவுலின் காரணங்களை சரியாக விளங்கிக் கொள்வது, இது என்று சொல்லும் சொல்லின் நோக்கத்தைப் பொறுத்து அமைந்திருக்கிறது: "தாமாகவே" முன் வந்து செய்வது என்று எதைப் பற்றிக் குறிப்பிடுகிறார். "தன்னிச்சையாக" (ἑκών, *hekōn*) என்ற சொல், புதிய ஏற்பாட்டில் இந்த இடத்திலும் ரோமர் 8:20ல் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு மாறான சொல் விருப்பத்திற்கு மாறாக (ἄκων, *akōn*) என்பதும் இங்கே மட்டும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. தன் சுதந்திரத்தைக் கொண்டு அப்போஸ்தலர் அங்கே என்ன செய்தார்? அவர் கிறிஸ்துவை பிரசங்கம் செய்தார். அவருடைய பிரசங்கம், தான் அவர்களிடமிருந்து பெறும் உதவியை மறுப்பதை கொண்டதாயும் இருந்தது. 9:16ல் "கடமை" என்று சொல்லப்படுவது அவருடைய பிரசங்கத்திற்கு ஒரு குறிப்பு "இதுவேயாகும்," ஏனெனில் அவர் கிறிஸ்துவின் மீது அன்புள்ளவராய் இருந்ததால் அவர் சுவிசேஷத்தை பரப்பினார் என்பதை கூறுகிறது. பெற்றோர் தங்கள் குழந்தைகளின் மேல் வைத்துள்ள அன்பால் அவர்களை போஷிப்பது போல், பவுல் பிரசங்கம் செய்ததும் அந்த மக்களின் மேல் கொண்ட அன்பினால், மட்டுமே.

9:17, 18ல் சொல்லுவதின் அர்த்தத்தை அதன் விளக்கவுரையில் பார்க்கலாம்: "நான் இதை தன்னிச்சையாக செய்திருந்தால் (அப்படி செய்யவில்லை) அதற்கான பலனை எதிர்பார்க்கலாம். நான் கட்டாயப்படுத்தபட்டேன். கிறிஸ்துவின் மேல் கொண்ட அன்பினால் அவருக்கு கீழ்ப்படிவதை விட வேறு ஒன்றும் செய்ய இயலாது. பிரசங்கம் செய்வது என் வேலையாயிருந்தால், அதற்கான வெகுமதியை (μισθός, *misthos*, 'ஊதியங்கள்') எதிர் பார்க்கலாம். ஆனால் என் வெகுமதி அப்படி பிரசங்கம் செய்வதற்குள் அடங்கியிருக்கிறது." பவுல் தனக்கு உடன்பாடில்லாத போதும், கிறிஸ்துவிற்கு அடிமையாயிருந்தபடியால், தான் கொரிந்து பட்டிணத்தில் செய்த ஊழியத்திற்கு வெகுமதி பெற மறுத்தார். அவருடைய எஜமான் கட்டளையிட்டதற்கு இணங்கி அங்கே ஊழியம் செய்தார். அவர் பணம் இல்லாத "வெகுமதியை" எதிர்பார்த்தார்.

பவுலின் வெகுமதியும், பெருமையும் ஒருவரையும் பலனில்லாமல் போகச் செய்யவில்லை. கொரிந்து சபையில் பிரசங்கம் செய்தது, அவருடைய "சொந்த விருப்பத்தைப்" (*hekōn*)[8] பொறுத்தே இருந்தது, அது அவருக்குக் **உக்கிராண உத்தியோகமாக ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே**. அப்படி கொடுக்கப்பட்ட பொறுப் பிற்கு, பிரசங்கிப்பதும் அதற்கு கொரிந்தியர்களிடமிருந்து பணம் பெறாமலிருப்பதும் அவசியமாயிருந்தது. அவருடைய சொந்த ஏற்பாட்டில் அவர் ஊழியம் செய்யவில்லை. கர்த்தர் அவருக்கு அந்த

பொறுப்பைக் கொடுத்திருந்தார் (காண்க 4:1). வெகுமதியையும், கிருபையையும் ஒரு முகப்படுத்துவது, விரிவுரையாளர்களுக்கு கடினமான காரியமாக இருந்தது. இருப்பினும் பின்னாளில் வந்த கிருபை மற்றும் வெகுமதி அல்லது தண்டனை, பவுலுக்கு கிடைத்த வெகுமதியுடன் சம்பந்தம் இல்லாமல் இருந்தது.

அவரது கலந்துரையாடலில் ஒரு சுற்றுச்சூழல் வழியைப் பயணிக்கையில், அப்போஸ்தலன் கையில் உள்ள விஷயத்திற்குத் திரும்பினார்: கிறிஸ்தவர்கள் அதிக நன்மைக்காக ஒரு உரிமையை ஒதுக்கித் தேர்ந்தெடுக்கலாம். பவுலின் சொந்த வாழ்க்கையில் அதை பார்க்கலாம். அவருக்கு கொடுக்கப்பட்டிருந்த பொறுப்பான ஊழியத்தின் மூலம், கொரிந்தியர்களுக்கு பிரசங்கம் செய்து வந்ததற்கான வெகுமதி, அவருடைய சுயமரியாதையும், சுவிசேஷத்தை எந்த வித சம்பளமும் பெறாமல் கொடுத்ததின் பெருமையுமேயாகும். தன் சுவிசேஷப் பணியில் எப்பொழுதும் தன் உரிமையை உபயோகிக்கவில்லை. அதன் விளைவால், கொரிந்தியர்கள் தங்கள் அறிவில் பெருமை கொள்ளாமல், தங்கள் உரிமைகளை விட்டுக் கொடுத்து, ஒருவர் மேல் ஒருவர் அக்கறை கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறார்.

## எல்லோருக்கும் அடிமை (9:19-23)

**19நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன். 20யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப் போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு நியாயப்பிர மாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவுமானேன். 21நியாயப் பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போலவுமானேன். அப்படியிருந்தும், நான் தேவனுக்குமுன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிர மாணத்துக்குள்ளானவனாயிருக்கிறேன். 22பலவீனரை ஆதாயப் படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன். 23சுவிசேஷத்தில் நான் உடன் பங்காளியாகும்படிக்கு, அதனிமித்தமே இப்படிச் செய்கிறேன்.**

**வசனம் 19.** பவுல் தன்னையே உதாரணமாய் தன் ஊழியத்தில் வெளிப்படுத்தினார். தன் ஊழியத்தில் விமர்சனங்களை எதிர் பார்த்தார். கொள்கையில் உறுதியாய் இருப்பதற்கும், சுதந்திரத்தை

உபயோகிப்பதற்குமான வித்தியாசத்தை உணர்ந்திரு- கொரிந்து சபையாரை குற்றப்படுத்துவதற்கு பதிலாக, அவர்களிடம் பொருளாதார உதவி பெறாமல் போதித்து வந்தார். அவருடைய உரிமையை அவர் உபயோகித்திருந்தால் சில பலவீனமான கிறிஸ்தவர்கள் வழிவிலகி போயிருக்கலாம். தன்னை ஓர் **அடிமையாக** காண்பித்ததின் மூலம், பெரிய சுதந்திரம் அவருக்கு உண்டாயிருந்தது.

இங்கே சில பலவீனமான கிறிஸ்தவர்களை கருத்தில் கொண்டார். காரணம் கிறிஸ்துவுக்காய் இன்னும் (ἵνα, *hina*) அதிகமான ஆத்துமாக்களை சம்பாதிப்பதற்காய். ஆனால் எப்பொழுதும் அவர் அப்படி இருக்கவில்லை. கலாத்திய சபையிலிருந்த புற ஜாதியார், யூத மார்க்கத்தின் மீது சார்ந்த பொழுது “ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத் தனத்தின் நுகத்துக்குட்படாமல்” என கட்டளை கொடுக்கிறார் (கலா. 5:1). தானே சில நடைமுறைகளை கடைப்பிடித்து வந்த போதும், இந்தக் காரியத்தில் அவர் உறுதியாயிருந்தார் (காண்க அப். 16:3; 18:18; 21:26). அப்போஸ்தலரின் இந்த நடவடிக்கை, எல்லாவிதமான சூழ்நிலைகளுக்கும் ஒரே விதமான நடைமுறை பொருந்தாது என்பதை உணர்த்துகிறது. அங்கே கேள்வி எழுப்பப்பட்டபோது, விசுவாசிகள் தங்களை தாங்களே ஆராய்ந்து பார்க்க வேண்டும், வேதத்தில் சொல்லப்பட்டிருந்த உதாரணங் களின் அடிப்படையில் தங்கள் சார்பு நிலையை சோதிக்க வேண்டும். மேலும் விசுவாசத்தில் நடக்க வேண்டும். கர்த்தர் மேல் நாம் கொண்ட அன்பு, அவருடைய நாமத்தை மகிமைப் படுத்துவதற்கு நாம் கொண்ட ஆசை மற்றும் அழிந்து போகும் ஆத்துமாக்கள் மேல் நாம் கொண்ட அன்பு, ஆகியவை நம்மை வழிநடத்தும் வெளிச்சங்களாக இருக்க வேண்டும்.

**வசனம் 20.** யூத எண்ணங்கள் அல்லது சிந்தனை உடைய பவுல், யூதர்களையும் புறஜாதியாரையும் வகைப்படுத்த வேண்டும். ஆனால் கடவுள் உடன் இருப்பதும், யூதனாய் இருப்பதும் சமம் அல்ல என்பதை புரிந்து கொண்டார். நியாயப்பிரமாணத்தின் சில பகுதிகளிலே, இஸ்ரவேலரை மற்ற தேசத்தாரிடமிருந்து வேறு படுத்தி காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது எப்பொழுதும் மத சம்பந்தமான காரியங்களில் காட்டப்படவில்லை. சில பிரமாணங் கள் யூத மார்க்கத்தைச் சார்ந்தது. பவுல் யூதனாய் இருப்பதில் சந்தோஷப்பட்டார். ஆனால் பிரமாணத்தில் சொல்லப்பட்டவைகள், எல்லா இனத்தாருக்கான கடவுளின் சித்தம் அல்ல என்பதை உணர்ந்திருந்தார்.

பவுல் யூத நடைமுறைகளை கடைப்பிடித்தது, சந்தர்ப்ப வாதத்தின் கீழ் வருகிறது. அவர் யூதர்கள் மத்தியில் சுவிசேஷம் சொல்வதற்காக, அவர்களுடைய உணவை சாப்பிட்டார், தேவைப் படும் பொழுது அவர்களின் நடைமுறைகளை கடைப்பிடித்தார். அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டபின், கிறிஸ்துவைக் குறித்தும்,

இரட்சிப்பைக் குறித்தும் அவர்களுக்கு போதித்தார். **நியாயப்பிரமாணத்திற்கு** கீழ்ப்படிந்தவர்கள் **யூதர்கள்.** பிரமாணங்களை கைக்கொண்டு வந்தவர்கள் உணவுப் பழக்க வழக்கங்களில் கடுமையான நடைமுறைகளை கடைப்பிடித்து வந்தார்கள். மேலும் விருத்தசேதன முறைமையையும் கடைப்பிடித்து வந்தார்கள். பவுல் தான் யூதனாய் இருந்த போதும், நியாயப் பிரமாணத்தின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை உணர்ந்திருந்தார் மற்ற கிறிஸ்தவர்களும் கூட.

"நியாயப்பிரமாணத்தின் கீழ்" அடங்கியிருப்பதை சாதாரணமாக எடுத்துக்கொண்டதின் மூலம் 2 கொரிந்தியர் 3ல் அந்த பிரச்சனையை கையாளுகிறார். 2 கொரிந்தியர் நிருபத்தை பவுல் எழுதும் பொழுது, அந்த சபை மக்கள் மற்றவர்களின் குரலுக்கு செவி சாய்த்து விழுந்து போயிருந்தார்கள். கடவுளுடைய வார்த்தை எழுதப்பட்ட இருதயத்தையும் கற்பலகைகளையும் பவுல் ஒப்பிடுகிறார் (2 கொரி. 3:3). "மரணத்துக்கேதுவான ஊழியத் திலிருந்து," பரிசுத்த ஆவியால் கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய ஊழியத்தை வித்தியாசப்படுத்துகிறார் (2 கொரி. 3:7).

**வசனம் 21.** 9:20ல் உள்ள "நியாயப்பிரமாணம்" மோசேக்கு கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம். பவுல், புறஜாதியாரிடம் இருந்த போது பிரமாணத்தை சார்ந்த சடங்காச்சார காரியங்களில் கவனம் செலுத்தவில்லை. ஆனால் அதற்காய், கிறிஸ்துவுக்குள் இருந்தால், நீதி மற்றும் நேர்மையான காரியங்களை பின்பற்ற தேவையில்லை என்பது போல் நடந்து கொள்ளவில்லை. அப்படி அவர் சடங்காச்சாரங்களில் கவனம் செலுத்தாதது, கிறிஸ்துவுக்காய் ஆத்துமாக்களை சம்பாதிப்பதற்காகவே. அதே சமயம் யூதர்களோடு அவற்றை கடைப்பிடித்த போதும், அதே போன்ற நோக்கத்தோடு செயல்பட்டார்.

**தேவனுக்குமுன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவனாயிருக்கிறேன்** என்ற கூற்றின் மூலம் Herman Ridderbos என்பவர் பல முடிவுகளை வெளிப்படுத்துகிறார்.[9] (1) நியாயப்பிரமாணம் இனி கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களுக்கு தகுதியற்றதல்ல. யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் பவுலின் பிரசங்கத்திற்கு ஒத்துப்போகவில்லை. (2) பிரமாணங்கள் கிறிஸ்த வர்களின் நன்மைக்கான போதனைகளையே கொடுத்தது. "பிரமாணங்கள்" என்று இங்கே குறிப்பிடுவது, மோசேயின் பிரமாணத்தையே குறிக்கிறது. (3) கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு கட்டுப்பட்டுள்ளேன் என்று கூறுவதின் மூலம் பிரமாணத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகிறார். புதிய உடன்படிக்கையின் படி, பிரமாணத்தின் எந்த பகுதி பொருந்தும் எந்த பகுதி இல்லை என்பதை கிறிஸ்து தீர்மானிக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் இருந்தால், அவரின் கட்டளைகளுக்கு

கீழ்ப்படிந்திருக்கிறோம் என்று பவுல் கூறுகிறார். “ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பதின் மூலம் கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறை வேற்றுகிறோம்” (கலா. 6:2) என்று விசுவாசிகளுக்கு கூறுகிறார். கிறிஸ்துவுக்கு நம்மை ஒப்புக்கொடுப்பது அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதாகும் என்று சொல்லுகிறார். அவருக்கு “பிரமாணம்” என்ற வார்த்தையைக் குறித்து வெறுப்பு இருக்கவில்லை. குறிப்பிட்ட சில பகுதிகளை எப்படி கிறிஸ்துவின் பிரமாணம் என்று பவுல் குறிப்பிடுகிறார்? இயேசுவின் சில போதனைகளைப் பற்றி குறிப்பிடுகிறாரா? அவருடைய சில கருத்துக்கள், கிறிஸ்துவின் பிரமாணம், மோசேயின் பிரமாணத்தை விட மேலானது என்பதாய் இருக்கிறது. ஆனால் எப்படி கிறிஸ்துவின் பிரமாணம் மோசேயின் பிரமாணத்தை விட வேறானது என்று தெரிந்து கொள்வது? அந்த வேறுபாட்டை தெரிந்து கொள்ள பவுல் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலையே சார்ந்திருக்கிறார். மோசேயின் பிரமாணத்தையும், இயேசுவின் போதனைகள் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலையும் ஒரு தனிப்பட்ட முறையில் தொடர்பு படுத்துகிறார். அவருடைய இலக்கை பரிசுத்த ஆவியானவர் மூலம் அப்போஸ்தலர்களிடத்தில், கர்த்தர் கொண்டு சென்றிருக்கிறார் என்ற உள்ளார்ந்த நிச்சயம் பவுலுக்கு இருந்தது.

**வசனம் 22. பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்** என்று பவுல் சொன்னார். மற்றவர்கள் கிறிஸ்துவில் வளர்வதற்காக, எப்படிப் பட்ட நடவடிக்கையாயினும், அது அந்த பலவீனமான விசுவாசி களுக்கு உதவுமானால், அப்படி மாற்றிக் கொள்ள தயாராகவே இருந்தார். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் தவறாக இருக்கக் கூடாது. அவ்வளவே. ஆனால் இப்படி வளைந்து கொடுக்கும் தன்மைக்கு ஒரு எல்லை இருந்தது. Ben Witherington III இப்படி சொல்கிறார்: “விக்கிரக ஆராதனைக்காரனுக்கு விக்கிரக ஆராதனை செய்பவன் போலவும், விபச்சாரக்காரனுக்கு விபச்சாரக்காரன் போலவும் மாறினேன்”[10] என்று அவர் கூறவில்லை. அப்போஸ்தலருக்கு தனிப்பட்ட காரியங்களோ, சமாளிப்பதற்கான பெருமையோ, நினைவில் வைத்துக் கொள்வதற்கான சடங்காச்சார விஷயங்களோ இருந்ததில்லை. அவருடைய ஒரே நோக்கம் பாவத்தில் வாழ்பவர்களை மீட்டு கிறிஸ்துவினடைக்கும், இரட்சிப்பினடைக்கும் வழிநடத் துவதே. தன்னை மற்றவர்களின் முறைமையின் படி மாற்றிக் கொண்டார். எதற்காக? **எப்படியாயினும்** ஒரு **சிலரை இரட்சிப்புக்குள்** வழிநடத்துவதற்காக. அவருடைய வார்த்தையையும், நடவடிக்கையையும் தொடர்பு படுத்தி பவுல் சொல்ல முடியும் “ஒவ்வொருவனும் தன் சுய பிரயோஜனத்தை தேடாமல் பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக் கடவன்” (காண்க 10:24).

**வசனம் 23.** பவுல் தன் வேலையில் ஒரே சிந்தை உடையவராக இருந்தார். நான் எல்லாவற்றையும் **சுவிசேஷத்திற்காக செய்கிறேன்** என்று எழுதுகிறார். அவருடைய ஒவ்வொரு செயல்களும் கிறிஸ்துவின் ராஜ்ஜியத்தை விரிவுபடுத்துவதை நோக்கியே இருந்தது. அவருடைய போதனைகள், பாவத்தில் தொலைந்து போன ஆத்துமாக்களுக்கு மாத்திரம் நன்மை பயக்கவில்லை, அது அவருடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் பிரயோஜனமாயிருந்தது. ஆத்துமாக்களை கிறிஸ்துவினிடம் வழி நடத்துவதின் மூலம் நானும் அதில் பங்காளரானேன் என்று சொல்கிறார். “அதில்” (ஸ்ஸ்டூ, *autou*) என்று குறிப்பிடுவது பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தை குறிப்பதாகும். பங்காளர் என்று சொல்லும் போது அது ஆசீர்வாதத்தில் பங்கு என்பதையும் குறிப்பதாகும். P. T. O’Brien குறிப்பிடும் போது “சுவிசேஷ வளர்ச்சியில் பவுலின் பங்கு” என்று அதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்கிறார். மேலும் “அவர் சுவிசேஷத்தின் பங்குதாரர்” என குறிப்பிடுகிறார்.[11]

## பரிசுப்பொருளை நோக்கி பாருங்கள் (9:24-27)

**[24]பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். [25]பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயி ருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.**
**[26]ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். [27]மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.**

9:24 தொடங்கி, போட்டி என்கிற மாதிரியை நமக்கு காண்பிக்கிறார். கிரேக்க-ரோம சாம்ராஜ்ஜியத்திலே விளையாட்டு வீரர்கள் மிகவும் பிரசித்தி பெற்று இருந்தார்கள். முக்கியமான பட்டணங்களிலே இப்படிப்பட்ட போட்டிகள் வருடத்திற்கு ஒரு முறையோ அல்லது சிறிது கால இடைவெளியிலோ இப்படிப்பட்ட போட்டிகள் நடக்கும். வெற்றி பெறுபவர்கள் பட்டிணந்தோறும் சென்று பரிசு பெறுவார்கள். அரசாங்கம் அவர்களுக்காய் நினைவுத் தூண் கூட எழுப்பினார்கள். எல்லா வீடுகளிலும் அவர்கள் பரிச்சயமாயிருந்தார்கள். இப்பொழுது போல், அப்பொழுதும் வாலிபர் சிறந்த விளையாட்டு வீரர் ஆக ஆசைப்பட்டார்கள். உற்சாகமுள்ள பார்வையாளர்கள் அந்த விளையாட்டுத் துறையை வளர்த்தார்கள்.

வெற்றி பெறும் வீரர்கள், முதல் நூற்றாண்டிலே உலகம் முழுவதும் கௌரவிக்கப்பட்டார்கள். ஆனால் கிரேக்க நாடு எல்லா

விளையாட்டுகளுக்கும் தாயகமாக விளங்கியது. 6 மற்றும் 7ம் நூற்றாண்டில் கி.மு. ஏற்பட்ட பொருளாதார விரிவு முதல் நூற்றாண்டிலிருந்து தொடங்கியதாகும். முதல் ஒலிம்பிக் போட்டி கி.மு. 776ல் தொடங்கப்பட்டது. பழங்கால எழுத்தாளர்கள், இப்படி நடைபெற்ற போட்டிகளை குறித்து தேதி வாரியாக எழுதி வைத்துள்ளார்கள்.

இஸ்துமானியாவில், மற்ற பகுதிகளிலும் பவுல் அப்படிப்பட்ட விளையாட்டுகளை கண்டிருக்கலாம். விளையாட்டிலிருந்து சில உருவகங்களை சில இடங்களில் உபயோகிக்கிறார் (கலா. 2:2; 5:7; பிலி. 2:16; 2 தீமோ. 4:7). பான்-கெலனிக் விளையாட்டுகளில் கொடுக்கப்பட்ட பரிசுகள் இஸ்தாமியாவிலிருந்து வரவழைக்கப் பட்ட மலர்களால் செய்த மலர் கிரீடமாக இருந்தது. எந்த விளையாட்டிலும் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல பதக்கங்கள் கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு போட்டியிலும் ஒரே ஒரு வெற்றியாளர் மற்றவர்கள் எல்லாம் தோல்வி அடைந்தவர்கள். பவுல் கிறிஸ்தவர்களின் கடைசி காலத்தை மாலை அல்லது தோரணம் பெறும் காலம் என்று குறிப்பிடுகிறார் (“பரிசு”; பிலி. 3:14; “கிரீடம்”; 1 தெச. 2:19).

கிரேக்க மொழியிலே, விளையாட்டு வீரர்களுக்கு கொடுக்கப்படும் “பரிசு” என்பதற்கு உகந்த வார்த்தை ஸ்டெபெனாஸ் (στέφανος, *stephanos*). மொழிபெயர்ப்பிலே கிரீடம் என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால் பவுல் கிறிஸ்தவ வெகுமதியை, ராஜாக்கள் அணியும் கிரீடத்துடன் ஒப்பிடவில்லை. மேலும் கிரீடத்தில் வைக்கப்படும் இலையானது விரைவில் உதிர்ந்து விடும். கிறிஸ்து கொடுக்கும் பரிசு மிகுதியான செல்வமோ, அல்லது அதிகாரமோ இல்லை. மாறாக பாவத்தின் மேல் வெற்றியை கொடுக்கிறார். “பரலோகத்தின் அழகை அறிவிப்போன்” என்ற ஆங்கில பாடல் மாளிகைகள் மற்றும் கிரீடம் போன்றவற்றை உருவகப்படுத்தி தவறான புரிந்து கொள்ளுதலை கொடுக்கிறது. கிறிஸ்தவ ஊழியத்திலே ஒப்பிடக்கூடியது சுய ஒழுக்கம் மற்றும் தொடர்ந்து போராடும் குணம் மட்டுமே. இது சுலபமான வாழ்க்கை அல்ல. பவுலின் செய்தியானது கிறிஸ்தவ வாழ்க்கை வாழும் முறையைப் பற்றியதாகும். அவர் சகோதரர்களை சுய ஒழுக்கத்தோடு இருக்க வற்புறுத்துகிறார்.

**வசனம் 24.** இந்த வசனத்தை புரிந்து கொள்வதற்கு முந்தைய வசனத்தில் பவுல் சொல்வதை புரிந்து கொள்வது அவசியமாகிறது. பவுல் கொரிந்து சபை மக்களுக்கு, தங்கள் உரிமையை உபயோகிப்பதை விட மற்றவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையில் அக்கரையுள்ளவர்களாய் இருப்பது அவசியம் என்பதை வற்புறுத்துகிறார் (8:13). எப்படி தான் சபை வளர்ச்சிக்கு பாடுபடுகிறேனோ அதே மாதிரியை பின்பற்ற வற்புறுத்துகிறார். விக்கிரக ஆராதனையைப் பற்றிப் பேசியது முதன்மைப் படுத்துவதை

நோக்கி நடத்தியது. தங்கள் உரிமைகளை உபயோகிப்பதை விட கிறிஸ்துவுக்காய் ஆத்துமாக்களை சம்பாதிப்பது அதிக முக்கியமாயிருக்கிறது. கர்த்தருக்காய் ஆத்துமாக்களை சம்பாதிப்பதற்காய் பவுல் "தான் எல்லாவற்றிற்கும் எல்லாமானேன்" (9:22) என்று சொல்கிறார். கிறிஸ்தவனாய் வாழ்வதற்கு உரிமைகளை விட்டுக் கொடுத்து சுய கட்டுப்பாட்டை கைக்கொள்ள வேண்டும். அதை செய்து காட்டும் படியாய், பவுல், விளையாட்டை உதாரணமாக எடுத்துக் கொள்கிறார்.

எந்தப் போட்டியும் ஓட்டப் பந்தயத்திற்கு முந்தயைதல்ல. ஆண்கள் ஒரே சீராக நிற்பார்கள். பிறகு விசில் அடித்தவுடன் இலக்கை நோக்கி ஓடுவார்கள். ஒலிம்பிக் போட்டிகளில் கூட தொடர் ஓட்டத்திற்கு ஒரு கூடுதல் மதிப்பு உண்டு. மற்ற போட்டிகள் வந்து போனாலும், சில நபர்களுக்கு நடுவில் நடக்கும் இந்த போட்டி மட்டும் நிலைத்து நிற்கிறது. பவுல் இந்த உதாரணத்தை, ஒருவர் தனக்கு கிடைத்த தாலந்தை உபயோகித்து மற்றவர்களை காட்டிலும் சிறந்து விளங்க வேண்டும் என்றோ அல்லது பரிசுப் பொருளை பெறுபவர் பற்றியோ கூறவில்லை. பவுல் நாம் எப்படி ஓடுகிறோம் என்பதைப் பற்றி அக்கறையுள்ளவராய் இருந்தார். **நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்** என்று கூறுகிறார். கிறிஸ்தவர்கள் தங்கள் எல்லா பெலனையும் உபயோகித்து ஓட வேண்டும், ஒருவர் மாத்திரமே பரிசுப் பொருளை பெறுவார் என்பதை கருத்தில் கொண்டு ஓட வேண்டும்.

**வசனம் 25.** பவுலின், ஆவிக்குரிய கனிகளின் பட்டியல் "சுய கட்டுப்பாட்டை" (கலா. 5:22, 23), இச்சையடக்கமாயிருப்பார்கள் என்பது உள்ளடக்கியுள்ளது. ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் வருடம் முழுவதும் கடுமையான உணவு பழக்கத்தையும் உடற்பயிற்சியையும் மேற்கொள்வர். அப்படி பந்தயத்தில் ஓடுபவரைப் போல, கிறிஸ்தவ வாழ்க்கையானது சோர்ந்து போன இருதயம் உடையவர்களுக்கல்ல. குறைவான திலிருந்து நிறைவானதை நோக்கி செல்ல வேண்டுமென அப்போஸ்தலர் கூறுகிறார். அழிந்து போகிற பந்தயப்பொருளை (φθαρτὸν στέφανον, *phtharton stephanon*; 1 கொரி. 9:25) அடைவதற்காய் வீரர்கள் பல ஆசைகளை துறந்திருக்கிறார்கள். அப்படியெனில் அழியாத **கிரீடத்தை** பெறப்போகிறவர்களாகிய நாம், எவ்வளவு அதிகமாக நம்முடைய மாம்ச இச்சைகளை நம்மை விட்டு அகற்ற வேண்டும். தன் கடைசி சொட்டு பலத்தையும் உபயோகப்படுத்துகிற கிறிஸ்தவர் தான் பவுலின் சிந்தையில் இருந்தார். ஆனால் நித்திய வாழ்வை அடையும் போட்டியில் ஒவ்வொரு கிறிஸ்தவரும் உள்ளனர் என்பதைக் கூறவில்லை. குழுவாக சேர்ந்து விளையாடும் விளையாட்டு கிரேக்க தேசத்தில் இல்லை. ஆனால் தேவ ராஜ்யம், அநேகரை நித்திய வாழ்வுக்கு நேராய் வழிநடத்தும் படியாய் கிறிஸ்தவர்களை ஏவுகிறது.

எப்படி சரீரத்தின் அவயவங்கள் சரீர நன்மைக்காக, இணைந்து செயல்பட வேண்டும் என்ற உதாரணத்தின் மூலம் பிற்பாடு அதைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (12:12).

**வசனம் 26.** கிறிஸ்தவ வாழ்க்கை குறிக்கோளற்ற வாழ்க்கையை குறிக்கவில்லை. பந்தய வீரரைப் போல முடிவை நோக்கியதாக வாழ்க்கை இருக்க வேண்டும். தன் வாழ்க்கை ஒரு அர்த்தம் நிறைந்த முடிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்பது பவுலுக்கு தெரியும். இயேசுவின் மூலம் கடவுளை மகிமைப்படுத்துவதே அவருடைய வாழ்க்கையின் நோக்கமாக இருந்தது. இயேசுவைப் போலவே அவர் தன் வாழ்க்கையில் வெற்றியை எதிர்பார்த்தார். அவர் ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிறவராய், பாவத்திலிருந்து விடுதலை பெற்று, பாவ மன்னிப்பு பெற்று வாழும் வாழ்க்கைக்கு நேராய் வழி நடத்தினார். ஆத்தும ஆதாயத்திற்காய் அர்த்தமற்ற உரிமைகளை அவர் எடுத்துக் கொள்ளவில்லை.

ஓட்டப் பந்தயம் அல்லது மாரத்தான் பந்தயம் போன்ற உவமைகளிலிருந்து மாறி குத்துச்சண்டையை எடுத்துக் கொள்கிறார். வெறும் காற்றை நோக்கி அடித்து சண்டையிடா வண்ணம் சண்டையிடுகிறேன், என்று எழுதுகிறார். கிரேக்க-ரோம விளையாட்டுகளிலே, குத்துச்சண்டை மிகவும் மோசமான விளையாட்டாக இருந்தது. எப்படி மாரத்தான் ஓட்டத்தைப் போல மெதுவாக செய்யும் நடைபயிற்சி இல்லையோ அப்படியே ஒலிம்பிக் குத்துச்சண்டை வீரரும், சிறு போட்டியில் விளையாடுபவரும் இல்லை. கிறிஸ்தவ வாழ்க்கையில் சுய கட்டுப்பாட்டுடன் ஓடுவதற்கு நோக்கமும், ஒழுக்கமும் தேவையானது.

**வசனம் 27.** நிச்சயமாகவே எந்த சந்தோஷங்களையும் அனுமதிக்காத வாழ்க்கையே பவுலின் சிந்தையில் இருந்தது. ஆகவே தான் "… சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது" (1 தீமோ. 4:8) என்று குறிப்பிடுகிறார். சுயத்தை வெறுப்பதில் பலனுண்டு என்று கருதினார். தன் சரீரத்தை அடக்கி ஒடுக்குவது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை கொடுத்த போதும், அதைப் பற்றிய வேதனை அவர் உள்ளத்தில் இருந்ததில்லை. ஆகவே தான் தன் **சரீரத்தை** அடக்கி **ஒடுக்கி** அதை எனக்கு **கீழ்ப்படுத்துகிறேன்** என்று கூறுகிறார். இப்பொழுது தான் ஒரு குறிக்கோளுடைய வாழ்க்கையைப் பற்றி எழுதுகிறார். சுய ஒழுக்கம் பரிசுத்த வாழ்க்கையோடு இணைந்திருக்கிறது. அது ஒரு நோக்கத்தை கொடுக்கிறது. அதனுடைய முடிவு, இரட்சகரும், ராஜாவுமாகிய கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் ஒரு வாழ்வு.

அப்போஸ்தலராய் இருப்பதோ அல்லது சுவிசேஷத்தை பிரசங்கிப்பதோ இரட்சிப்பைப் பெற்று தராது என்பதை பவுல் உணர்ந்திருந்தார். அவர் கூட அநீதியான மனுஷனாக மாற வாய்ப்பிருந்தது. ஆகவே அவரும், கொரிந்துவிலுள்ள மற்ற

கிறிஸ்தவர்களுக்கும் தங்களை ஒழுக்கமுடையவர்களாக காத்துக் கொள்ள வேண்டியதாயிருந்தது. காரணம் அவர்களும் கூட இரட்சிப்பிலிருந்து வழி விலகி போக வாய்ப்பிருந்தது. “இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள்” (1 தீமோ. 1:19, 20). கிரேக்க மொழியிலே தகுதியற்றவர் ἀδόκιμος (*adokimos*) என்ற வார்த்தை சோதிக்கப்பட்டு அதில் தோல்வியடைந்தவர் என்று பொருள் படுகிறது. வித்தரிங்டன் மிகச் சரியாக இவ்வாறு கூறுகிறார். கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து இராவிட்டால் தானும் தன்னோடு இருப்பவர்களும் அந்த கிரீடத்தை இழந்து விடுவோம் என்பதை உணர்ந்திருந்தார் என்பது தெளிவாக காணப்படுகிறது.[12]

## நடைமுறை பயன்பாடு

### சுதந்திரத்தை விட்டுக் கொடுக்கும் உரிமை

பொதுவாக ஒரு மனிதன் சுதந்திரம் பெறுவது அதை பயிற்சி செய்ய ஆப்பிரிக்க-அமெரிக்க மக்கள் மற்றும் பெண்கள் வாக்களிக்கும் உரிமை பெற்ற போது வாக்களித்தார்கள். சில பேர் அந்த உரிமை பெற சண்டையிட்டு மரிக்கவும் ஆயத்தமாய் இருந்தார்கள். பயிற்சி செய்ய முடியாமல் போனால் அந்த உரிமையினால் என்ன பலன் இருக்க முடியும்? ஆகிலும் பவுல் தன் உரிமையை உபயோகிக்க மறுத்து விட்டார். ஒரு கிறிஸ்தவனுக்கு விருத்தசேதனம் செய்யவோ அல்லது அதற்கு மறுக்கவோ சுதந்திரம் உண்டு (கலா. 5:6). ஆனால் விருத்தசேதனம் பண்ணாமலிருப்பது சுவிசேஷத்தின் கதவை அடைப்பதாய் இருப்பதால் பவுல் தீமோத்தேயுவை விருத்தசேதனம் செய்ய சொல்கிறார் (அப். 16:3). அப்போஸ்தலருக்கு பொருளாதார உதவி பெற உரிமை இருந்த போதிலும் (1 கொரி. 9:14; கலா. 6:6) அதை கொரிந்து சபையிடம் இருந்து மறுக்கிறார் (1 கொரி. 9:12). பவுல் அந்த உரிமையை உபயோகிக்கும் நோக்கம் இல்லாதபோதும் அந்த உரிமையை பெற்றிருந்தார்.

விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை உண்பதற்கு, கொரிந்து சபை சகோதரர்கள் எப்படி வற்புறுத்தினார்கள் என்பதை அதிகாரம் 8 மற்றும் 9களில் காணலாம். கடையிலே விற்கிற எதையும் வாங்கி புசியுங்கள்; மனச்சாட்சியினிமித்தம் நீங்கள் ஒன்றையும் விசாரிக்க வேண்டியதில்லை என்று 10:25ல் கூறுகிறார். ஆனால் விக்கிரக வழிபாட்டுத்தலங்களில் புசிப்பது அவற்றை ஆராதிப்பதின் ஒரு பகுதியாகும் என்று குறிப்பிடுகிறார் (காண்க 10:21). எந்தவொரு விசுவாசமோ, அறிவோ இப்படிப்பட்ட விக்கிரக ஆராதனையிலிருந்து விடுவிக்காது மேலும் அப்படிப்பட்ட செயல்கள் எப்படி கிறிஸ்தவர்களை எப்படி எதிர்மறையாய் பாதிக்கும் என்றும்

குறிப்பிடுகிறார். அப்படி அவர்கள் விக்கிரக வழிப்பாட்டுத்தலங்களில் புசிப்பதை தவிர்த்தாலும் அது எவ்வாறு ஒரு பலவீனமான கிறிஸ்தவனை பாவம் செய்ய இன்னும் ஊக்குவிப்பார் என்பதைப் பற்றி கூறுகிறார் (8:9). பலமான கிறிஸ்தவர்கள், பலவீனமானவர்களுக்காக தங்கள் சுதந்திரத்தை இழக்க வேண்டும்.

இன்றும் கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே இருதலை கொள்ளி எறும்பாக இருக்கிறார்கள். எப்பொழுது தன் உரிமைகளை பலவீனமான சகோதரர்களுக்காக விட்டுக்கொடுக்க வேண்டும்; எப்பொழுது மற்றவர்களின் சடங்காச்சாரங்களுக்கு மறுப்பு தெரிவிக்க வேண்டும்? வேதாகம அடிப்படையிலான பதில், அது சூழ்நிலையைப் பொறுத்ததே. இயேசுவை பின்பற்றியவர்கள் சுத்தமில்லாத கைகளுடன் சாப்பிட்டார்கள். அவர்கள் பரிசேயரின் முறைமைகளுக்கு கீழ்ப்படிய வேண்டுமென கட்டாயப்படுத்த படவில்லை (மத். 15:2; மாற்கு 7:5). எல்லாருடைய மனச்சாட்சியின் படி தினமும் வாழ்வது மிககடினம். ஆனால் சில சமயங்களில் புதிதாய் வந்த கிறிஸ்தவர்கள் வேதத்தை எப்படி புரிந்து கொண்டார்கள் என்பதை பொறுத்து தன் உரிமைகளை விட்டுக் கொடுப்பதும் உபயோகப்படுத்துவதும் அவசியமாகிறது.

## திருமணம் சிறந்தது

சபைகளில் துறவு தலைதூக்குவது சரியானதல்ல. பிரமாச்சார்யம் ஒரு வகையில் துறவே. ஆண் பெண் உறவு என்பது பிரம்மாச்சாரியத்தை விட பரிசுத்த குறைவு, என வேதத்தை அடிப்படையாக கொள்ளாமல் சிலர் சொல்கிறார்கள். எப்படி உபவாசம் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்கு உதவுமோ அப்படியே பிரம்மச்சார்யமும் உதவும் என்று சிலர் நினைக் கிறார்கள். பல நூற்றாண்டுகளாக கத்தோலிக்க மார்க்கத்திலே இத்தகைய பிரம்மாச்சாரியும் இருக்கிறது. அதற்கு மாறாக எபிரெய நிருபத்திலே இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. “விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசிங்கப்படாததாயுமிருதிருப்பதாக” (எபி. 13:4). பவுல் திருமணத்தை விலக்கி வைத்தவர்களை, விசுவாசத்தை மறுதலித்தவர்களுடன் ஒப்பிடுகிறார் (1 தீமோ. 4:1-3). மேலும் அவர் 1 கொரிந்தியர் 9:5ல் இவ்வாறு எழுதுகிறார். “மற்ற அப்போஸ்தலரும், கர்த்தருடைய சகோதரரும், கேபாவும் செய்கிறது போல மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக் கொண்டு திரிய எங்களுக்கும் அதிகாரமில்லையா?” வேதாகமம், துறவு வாழ்க்கை, திருமண வாழ்க்கையை விட மேலானது என்று எங்கும் சொல்லவில்லை.

## வேலையாள் அதன் பலனை அடைவார்

போதகர் தன் பொருளாதார தேவைக்காய் சபையை நடத்தாமல்,

ஆவிக்குரிய வளர்ச்சிக்காய் நடத்த வேண்டும் என்ற நோக்கம் இருந்த போதிலும், தன் குடும்பத்தை பராமரிக்க வேண்டிய தேவை அவருக்கு உள்ளது. தேவ ராஜ்ஜியத்திலே வேதத்தை போதிப்பதும் அதற்கான பொருளாதார தேவைகளை சந்திப்பதும் அதிக அவசியமாயிருக்கிறது. பவுல் மோசேயின் வார்த்தைகளை இங்கே குறிப்பிடுகிறார் "போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக" (உபா. 25:4). ஆத்தும ஆதாயம் செய்பவர்கள் பொருளாதார உதவி பெற வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே இந்த வசனத்தை குறிப்பிடுகிறார் (1 கொரி. 9:9; 1 தீமோ. 5:18). இது சுவிசேஷத்தை சொல்லும் மற்றவர்களுக்குப் பொருந்தும். 1 தீமோத்தேயு 5:18, இயேசு தம் சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்பியபோது கூறியதை இவ்வாறு குறிப்பிடுகிறார். "வேலையாள் தன் கூலிக்கு பாத்திரனாயிருக்கிறான்" (காண்க மத். 10:10). கலாத்தியருக்கு எழுதும் போது அப்போஸ்தலர் இவ்வாறு குறிப்பிடுகிறார். "மேலும் திருவசனத்தில் போதிக்கபடுகிறவன், உபதேசிக்கிறவனுக்கு சகல நன்மையிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்" (கலா. 6:6). பிலிப்பிய சபையின் உதவிக்காய் அவர்களை பாராட்டுகிறார் (பிலி. 4:15; காண்க 2 கொரி. 11:9).

போதகர்களுக்கு செய்த உதவி பற்றி வேதாகமத்தில் பல இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான விளக்கங்கள், உதவி செய்பவர் தெரிந்தெடுப்பதை பொறுத்ததே. சபையில் ஊழியம் செய்பவர்கள், வேலைக்கு தெரிந்தெடுக்கப் பட்டவர்களை போலல்ல. பணத்திற்காக மட்டுமே வேலை செய்யும் சுவிசேஷகர் இயேசு, கூலியாளுக்கும் மேய்ப்பனுக்கும் காட்டிய வித்தியாசத்தை நினைவில் கொண்டு வருகிறார் (யோவான் 10:11, 12). ஒவ்வொரு முழு நேர ஊழியரும் தன் உள்ளத்தை சோதித்தறிய வேண்டும். ஒருவர் தன் ஊழியத்தில் எப்பொழுதும் அதிகப்படியான ஊதியத்தையே அல்லது நல்ல நிலைமைகளையே எதிர்பார்த்து இருப்பாரானால் அவர் கிறிஸ்துவுக்காய் உண்மையான ஊழியம் செய்யவில்லை. ஆனால் அதே சமயத்தில் தன் குடும்பத்திற்கு தேவையான உதவியை மட்டும் பெற்றுக் கொள்பவர் தன் உரிமையை சரியாகவே உபயோகிக்கிறார்.

சுவிசேஷத்தை பரவச் செய்வதற்காய் தன் நேரம், சக்தி எல்லாவற்றை செலவிடுவதற்கு, எல்லாவிதமான உதவிகளையும் நல்லதொரு முறையில் செய்ய சபை கடமைப்பட்டிருக்கிறது. பவுல் தெளிவாக இவ்விதம் கூறுகிறார். "அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (1 கொரி. 9:14). நல்லதொரு முறையில் அப்படிப்பட்ட உதவிகளை செய்ய ஒவ்வொரு சபையும் முடிவு செய்ய வேண்டும். ஒரு பொதுவான கட்டளை என்னவென்றால் போதகருக்கு அதிகப்படியானதோ அல்லது மிகக் குறைந்த சம்பளமோ இருக்கக்கூடாது. அதற்கு அவருடைய பயிற்சி,

நிலைத்த தன்மை, உதாரணமாய் விளங்கும் தன்மை, சக்தி மற்றும் அறிவு ஆகியவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒருவர் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் முழு நேர ஊழியம் செய்வதாலேயே, அவருடைய உள்ளத்தில் பொருளாசை வராது என்று அர்த்தமல்ல, இதைப் போன்ற சில சோதனைகள் உண்டு. உண்மையில் விசுவாசக் குறைவினாலேயே இப்படிப்பட்ட சோதனைகள் வருகிறது. பொருளாசை தேவ அன்பை எடுத்துப் போட்டு, பொருளின் மீது அன்பை கொடுக்கிறது. அது எப்பொழுதும் திருப்தியை தராது.

### வசனத்தை உருவகமாக உபயோகிப்பது

பழைய ஏற்பாட்டிலுள்ள வசனத்தை எடுத்து, உருவகப்படுத்தி அதன் அர்த்தத்தை விளக்குவதற்கு பவுலுக்கு அதிகாரமிருந்தது என்பதாக 9:8, 9ல் பார்க்கிறோம். அப்படியானால் இன்றைய கிறிஸ்தவர்கள், வேத வசனத்தை, அதன் நோக்கத்தையும் அர்த்தத்தையும் புறந்தள்ளி பொருத்தமற்ற காரியங்களுக்கு உபயோகிக்கலாமா? இதை இப்படியாக முடிக்கலாம். இன்றைக்கு வேத வசனத்தை உருவகப்படுத்துவது அதை விளக்கிச் சொல்பவரின் கருத்தை பொறுத்ததேயாகும். கிறிஸ்தவர்கள், வேதத்தை எழுதியவர்கள், அதில் எப்படி உருவகப்படுத்தலை உபயோகித்திருக்கிறார்களோ அதை அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு மேல் செல்லக் கூடாது.

---

குறிப்புகள்

[1]David E. Garland, *1 Corinthians*, Baker Exegetical Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Baker Academic, 2003), 405. [2]Forms of the word for "apostle" (ἀπόστολος, *apostolos*) are translated "messengers" in 2 Corinthians 8:23 and "messenger" in Philippians 2:25. [3]John Painter, *Just James: The Brother of Jesus in History and Tradition*, 2nd ed. (Columbia, S.C.: University of South Carolina Press, 2004), 159-81. [4]Greco-Roman sources demonstrate that labor was not universally despised. The texts do not mention that it was normally the wealthy who praised the labor of others who served them well. (Robert M. Grant, *Early Christianity and Society* [London: Collins, 1977], 66-95.) [5]A brief summary of priests in the Greco-Roman world appears in Everett Ferguson, *Backgrounds of Early Christianity* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 141-43. [6]Garland, 415. [7]Rudolf Bultmann, "καυχάομαι," in *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel, trans. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1965), 3:645-54. [8]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3rd ed., Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 313. [9]Herman Ridderbos, *Paul: An Outline of His Theology*, trans. John Richard DeWitt (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1975), 284-86. [10]Ben Witherington III, *Conflict and Community in Corinth: A Socio-Rhetorical Commentary on 1 and 2 Corinthians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1995), 213.

[11]P. T. O'Brien, *Gospel and Mission in the Writings of Paul: An Exegetical and Theological Analysis* (Grand Rapids, Mich.: Baker Books, 1995), 96. [12]Witherington, 214.